244-45
30-
22-4-45-

Registered at the G. P. O. AS A NEWSPAPER

ஸன்மார்க்கபோதினி.

பத்திரவிலைவிகிதம்
ஊர்க்கு ரூபா க-௫0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫0
இந்தியாவுக்கு சதம்௫
பிறதேசங்களுக்கு எ௫

SANMARKA POTHINI

விளம்பர விலைவிகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
க0 க்குமேற்படுவரிஒரு8
௨0 க்குமேல்.............6
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும்3—ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Tuesday

VOL. XXXI
ககம் புத்தகம்

JAFFNA MARCH 30th 1915
யாழ்ப்பாணம் ௧௯௧௫ம் ௵ பங்குனி௴ ௧௬௨ செவ்வாய்க்கிழமை.

No 7
சங்கியை ௭

யுத்தநிலை.

யுத்தத்தைக்குறித்து சேர் ஜான்பிறான்ஞ் பேசியபோது யுத்தம் வெகுகாலம் நீடித்திராதென்று தாம் நம்புவதாயும், போர் முனையின்நிலைமை திருத்திகரமாயிருப்பதாயும், வெடிக்குண்டுகளும் மருந்தும் குறைவில்லாமல் வந்துசேரவேண்டியது முக்கியவிஷயமென்றும, கடுமையாய்ச் சண்டை நடக்கும் இம்மாசங்கள்முடிய நமக்கு நிச்சயமான வெற்றி கிடைக்குமென்றுஞ் சொன்னார்.

வேறோர்சமயத்தில் பேசினபோது மாரிகாலத்திலும் நமது சேனைகளின் சந்தோஷம் குறைவுபடவில்லை. இந்த யுத்தம் முரட்டுத்தனமான யுத்தம். இதற்கு வேண்டியது குண்டுமருந்துகள்தான். நமக்குள்ள தேவையிலும் செர்மனியருக்குக் குண்டுமருந்துகள் அதிகத்தேவை. அவர்கள் சிலகாலமாய் வீண்செலவுசெய்வதில்லை. அவர்கள் மனோற்சாகங் குறைந்துவிட்டது. அவர்கள் வருவில் வெற்றிபெறலாமென்று நம்பி மோசம்போய்விட்டார்கள். அவர்களுக்குப் பணத்தட்டுக்கேடு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. நீண்டகாலம் யுத்தம் நடக்குமென்று நம்ப இடமில்லை. வசந்தகாலம் ஐக்கியசேனைகளுக்குச் சௌகரியமாயிருக்கும். பிரான்சுச்சேனைகள் நன்நிலையிலிருப்பதுடன் அவர்களுக்குவேண்டிய சௌகரியங்களுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. டார்டனெல்சில் சிலகோட்டைகள் நாசமாய்விட்டன. அங்கும் பிரான்சு பெல்சியம் ருஷியா முதலியவிடங்களிலும் முடிவில் நாமே செயம்பெறுவோம் என்றார். இது நிச்சயமான சங்கதியே! குண்டுமருந்துகள் நாலுதிசைகளுக்கும் அனுப்பப்படவேண்டியிருப்பதால் அதனால் தட்டுக்கேடுண்டாகாவிட்டால் ஐக்கிய அரசுகளுக்கு விரைவில் செர்மனியடங்கவேண்டிவரும். குண்டு மருந்துகளின்வரவு சற்றேதாமதப்பட்டிராவிட்டால் சேர் ஜான்பிரான்சு அதைக்குறித்துப் பேசியிருக்கமாட்டார். செர்மனியருக்குச் செம்புக்குறைவாலும் அங்கிலேயர்க்கு வேலைச்சுணக்கத்தாலுங் குண்டுமருந்து குறையிற் குறையலாம். கப்பல் கட்டுமிடங்களிலும் யுத்ததளபாடஞ் செய்யுமிடங்களிலும் நேடுநேரமாக வேலைசெய்ய வேலைகாரர் விரும்பாமையால் லோட் கிற்சினா எச்சரித்திருக்கிறார். வரவுசெலவு மந்திரசபையும் இன்சினியர்சபையும் ஒன்றுகூடி யோசித்துச் சரிபோய்விட்டார்கள்.

பிரான்சு பெல்சியத்தில்நடக்கும் யுத்தநிலையைநோக்கினால் அகளரண்களைப் பிடிப்பதில் ஐக்கிய அரசகட்சியே செயம்பெறுகிறது. இருபக்கத்திலும் பெருந்தமான சேதம். அங்கிலேயர்பக்கத்தில் 500 க்கு மேலான உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டார்கள். இது உத்தியோகஸ்தரின் தீரத்தனத்தாலும் செர்மன் குறிகாரராலும் நடந்ததுபோலிருக்கிறது. என்றாலும் வெற்றி ஐக்கிய அரசகட்சியே! ஆகாயவிமானங்களும் இருபகுதியிலும் சேதங்களை விளைவிக்கின்றன. கடல்களில் செர்மனிய கப்பல்களால் இடையிடையே சில வியாபாரக்கப்பல்கள் சேதம்போய் விடுகின்றன. செர்மனிய கப்பல்களும் தமக்குச் சமீபத்துள்ள ருசியதுறைமுகங்களைத் தாக்குகின்றன.

டார்டனெல்சில் அங்கிலோ பிரான்சிய கப்பல்கள் தீரத்தனமாய் உட்புகுந்து சிலகோட்டைகளைப் பழுதாக்கிவிட்டன. சிலகோட்டைகளில் பலமான செர்மன் பீரங்கிகள் எறப்பட்டிருப்பதாயும்விளங்குகிறது. கோட்டையிலிருந்து சுட்டகுண்டுகள் கப்பல்களிற்பட்டன, மிதக்குஞ் சுரங்கத்தில் முட்டி இரு அங்கிலோ கப்பல்களும் ஒரு பிரான்சிய கப்பலும் அழிவாய்ப்பட்டன. இரண்டொன்று பழுதுபார்க்கவேண்டிய நிலைமையிலிருக்கின்றன. அங்கு புயற்காற்று வீசினதினாலும் காலநிலைமையின் பேதத்தாலும் கோட்டைகளைத்தாக்குதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. பத்துச் சண்டைக்கப்பல்கள் மத்தியதரைக்கடலின் கிழக்கரையில் ஆசியதுருக்கி ஓரமாயுள்ள டெனிஸ்டாஸ் தீவுக்குப் பின்புறத்தில நங்கூரமிட்டிருக்கின்றன. துருக்கரும் பழுதான கோட்டைகளைப் பழுதுபார்க்கிறார்களாம். சேதமடைந்த கப்பல்களுக்குப் பதிற்கப்பல்களும் வருகின்றன. 24உ மறுபடியும் இரண்டு டிஸ்றோயர்க்கப்பல்கள் சலசந்திக்குள் நுழைந்து வெகுதூரஞ்சென்றது. எவ்வளவு சேதம் நேரிட்டாலும் எடுத்த கருமத்தை முடித்துவிடவே ஐக்கியஅரசுகள் தீர்மானித்திருக்கின்றன. எகிப்தில் சுவேஸ்கால்வாய்க்கருகில் மீண்டும் சிலதுருக்கியபடைகள் காணப்பட்டுத் துரத்தப்பட்டன.

செர்மனிய தென்மேற்கு ஆபிரிக்காவில் ஜெனறல் போதா தக்க நடபடிகள் நடத்திவருகிறார். அங்கேயுள்ளசெர்மனியபடைகளுடன் தென்னமரிக்காவிலிருந்து சேனைகளைக் கொண்டுவந்தும் கலகக்காரரைச் சேர்த்தும் தென்னாபிரிக்காவைப்பிடிக்க எண்ணியிருந்ததுபோய் அங்குள்ள செர்மன் நாடுகளுக்கே ஆபத்துண்டாகும்போலிருக்கிறது. அங்குள்ள துறைமுகங்களை அங்கிலேயர் கைப்பற்றி அங்கே சாமான் போக்குவரவைத்தடுத்துத் தண்ணீர்போகும்வழியையும் மறித்துக்கொண்டனர். உணவுக்கு ஆடுமாடாதிய மாம்சவகைகளுண்டாயினும் ரொட்டிக்கு மாவின்றித் தட்டுக்கேடுண்டாகும். ஆயினும் செர்மனியருக்கு விஸ்தாரமான பூமியிருப்பதால் சீக்கிரத்தில் பிடித்துவிட முடியாதாம்.

அப்பால் கிழக்காங்கத்தை நோக்கினால் எவ்விடத்திலும் ருஷியரே முன்னேறுகிறார்கள். சிலவிடங்களிற் செர்மனியர் முன்னேறுகிற்பினும் படிப்படியாய்ப் பின்னிடுகிறதாய்விளங்குகிறது. ருஷியர் நாலரைமாசக்காலமாய் முற்றுக்கையிட்டிருந்த பிஸ்மில் கோட்டை ஆகாரத் தட்டுக்கேட்டால் ருஷியருக்குப் பணிந்துவிட்டது. ஆகாயக்கப்பல் சில தகாடப்பிகளிற்கொண்டுபோய் உணவுப்பொருட்கள் கொடுத்துந் தாங்கவில்லை. ஈற்றில் தளகர்த்தரின் குதிரைகளைக்கொன்று மாமிசத்தையருந்திக் காத்துவந்தும் தாங்காமல் ருஷியரை எதிர்த்து அப்பால் ஓடித் தப்பக்கூடுமானால் தப்பும்படி ஆஸ்திரியசேனாபதி உத்தரவுகொடுக்கவே அவர்கள்போய் மீண்டிப் பார்த்தும் ருஷியசேனை தொகையாய்நின்று எதிர்த்தடித்ததினால் திரும்பிக் கோட்டைக்குட்புகுந்தனர். ஈற்றில அங்குள்ள பீரங்கிகள் யுத்ததளபாடங்களாதியவைகளைச் சேதப்படுத்திவிட்டு ஆஸ்திரியர் கவுரவமாய்த் தம்மை ருஷியருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டனர். பிடிபட்ட சேனைகளில் 9 ஜெனறல்களும் 93 உத்தியோகஸ்தரும் 2500 இராணுவ அதிகாரிகளும் 11700 போர்வீரருமிருந்தனர். இதனால் கோட்டையைக்காத்திருந்த 50000 ருஷியசேனைகள் வேறிடத்திற்போய்ச் சண்டைசெய்ய வசதியுண்டாகும். ஆதலால் கார்ப்பேதியன் மலைப்பக்கத்தில் முன்னிலுமதிகமாய் ஆஸ்திரியரும் துருக்கரும் நெருக்கப்படுவார்கள்.

கடற்கொள்ளையடித்த செர்மனியரின் டிரெஸ்டன் என்றகப்பலும் சில்லிக்கப்பால் தொலைந்தது. செர்மனியரின் சப்மரையின்களில் அதிக கொடுமைசெய்துவந்த U 29 என்ற சப்மரையினும் முழுகடிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று நம்புகிறார்கள். அப்படியானால் துஷ்ட சப்மரையினுடன் அதன் கப்பித்தானுந் தொலைந்துபோயிருப்பார்.

இந்த யுத்தத்தைக்குறித்துப் பிரித்தானிய பிறதேச காரியமந்திரியாரான சேர் எட்வாட் கிறே பேசியபோது "ஐரோப்பாவிலுள்ள தத்துவஅரசுகள் ஒன்றுகூடியோசித்தால் இந்தயுத்தம் நேரிட்டிராதென்றும், பால்கன்நாடுகளின் சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்ததைவிடச் சேர்வியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் நேரிட்ட மனஸ்தாபத்தைத் தீர்ப்பது கஷ்டமாயிராதென்றும், தாம் அண்டை அயல்தேசங்களைத் தொந்தரவுசெய்தாலும் எம்மை ஒதுங்கியிருக்கும்படி செர்மனி கேட்டதற்கு நாம் சம்மதிக்கவில்லையென்றும், கலந்துயோசனைசெய்யச் சென்ற ஆடிமாசத்தில் பிரான்சும் இத்தாலியும் ருஷியாவும் சம்மதித்தனவென்றும், அதன்பின் கேக்கு மத்தியஸ்தசபைக்குவைப்பது நலமென்று ருஷிய சக்கிரவர்த்தி செர்மனிய சக்கிரவர்த்திக்கு அறிவித்தாரென்றும், ஆனால் செர்மனி யுத்தத்திற்குத் தயாராயிருந்ததினால் ஒன்றையுஞ் செவியில வாங்கவில்லையென்றும், நாம் வாக்குக்கொடுத்திருந்த வாக்குப்படி பெல்சியத்திற்கு உதவிசெய்வது நமதுகடமையாயிருந்ததென்றும், பெல்சியம் சுயேச்சையடைந்து பரிகாரம்பெற்றால்தான் சமாதானம் ஏற்படுமென்றும், ஐரோப்பிய இராச்சியங்கள் தத்தம் இஷ்டப்படி சுயேச்சையாய் நடைபெறவேண்டுமென்பது தம்முடையவும் தமது கூட்டாளிகளுடையவும் நோக்கமென்றும், அவைகளின் சுயேச்சையைக் குறைத்துத் தனதிகாரத்துட்படுத்தவதே செர்மனியின் நோக்கமென்றும், செர்மனிக்குட்பட்டு வாழ்வதிலும் செத்தாலும் பறுவாயில்லை, அல்லது ஐரோப்பாவைவிட்டு ஓடிப்போனாலும்போகலாமென்றும், யுத்தத்தின்பின் நாமும் மற்றத்தேசங்களும் இஷ்டப்படி வாழக்கூடியதாயிருக்கவேண்டுமென்றும், நாம் யுத்ததெய்வமென்றெண்ணுஞ்செருக்கு ஒழியவேண்டுமென்றும் இன்னும் பலவாறும் பேசினார். இப்பேச்சில் செர்மனியை அடியோடு நசுக்கிவிடுங்கருத்தில்லாமையாலும் செர்மனியுங் களைகொண்டிருப்பதாலும் விரைவில் சமாதானம் ஏற்படுமென்று நம்ப இடமுண்டாகிறது.

யாழ்ப்பாணம்.

வர்ச்சிர்—மழையில்லை. வெயிலகோரம். தென்றற்காற்றும் தலைகாட்டிற்று.

மலிவான டிக்கற்—பாஸ்குகால விடுதலைநோக்கி 26உ தொடக்கம் சித்திரைமீ 1உ வரையில் புகைரதப் பிரயாணக்காரருக்கு மலிவுடிக்கற் கொடுக்கப்படும்.

பிரதிவக்தர்ப்பரீட்சை—இக்கடைசிப்பரீட்சையில் 19 பேர் சித்தியெய்தினர். அவருள் ஸ்ரீ வி. சி. கந்தையா, ஸ்ரீ எஸ்.ஜீ. உவாட்சன், ஸ்ரீ தி. ஸ்பென்சர், ஸ்ரீ ரீ. அருமைநாயகம், ஸ்ரீ எம். சோமநாதபிள்ளை; ஸ்ரீ எச். ரீ. இராமச்சந்திர, ஸ்ரீ ஜெமில் வேதக்கண், ஸ்ரீ எ. சுலாம்பிள்ளை, ஸ்ரீ சி. எ. சலமன் ஆகியவர் தமிழர்.

கொலை—நீர்வேலியில் பயிரழிவுகாரணமாக நேர்ந்த கலகத்தில் ஓர் திருமுனைவயோதிபர் வெட்டுண்டிறந்தார். வேறு சிலர்க்குக் காயம். இதுவும் கம்மாளர்கலகத்தினர்பகுதியென்கிறார்கள். விளக்கம் முடிந்தபின் சங்கதி தெரிவிப்போம்.

விசர்நாய்க்கடி—இதனால் இவ்விடங்களில்அதிக திகிலுண்டாயிருக்கிறது. இதனாற் கடியுண்டஓராள்நம்மூரிலிறந்தான். வேறொரு ஸ்திரியும் கடியுண்டு அவஸ்தையாயிருக்கிறாள். வயாவிளானிலும்ஒருவர்கடியுண்டார். இவரைக்கூனூருக்கனுப்பும்படிஏசன்றரைக்கேட்டனர். முடிவுதெரியவில்லை. அனுப்பவேண்டியது அரசினர்கடமையே!

நமது ஏசன்றர்—மன்னாருக்கும் மண்டபத்துக்குஞ்சென்று அங்கிருந்து கொழும்புக்குப்போய் அங்கே மகிமைப்பட்ட ஆராய்ச்சிக்கொம்மிற்றியிற் சமுகமாயிருந்து யாழ்ப்பாணந் திரும்பினர்.

கெம்பிரிட்ஸ லோக்கற்பரீட்சை—இப்பரீட்சைமுடிவு இங்கிலந்தில் வெளிவந்தும் பல கல்லூரிகளின்பேறு இங்கு இன்னும் எட்டவில்லை. இங்கிலந்தில் ஆட்களிருந்து செய்தியனுப்பிய சில கல்லூரிகளின்பேறு வெளியாயிருக்கிறது. மட்டுக்களப்பிலுள்ள செயின் அலோசியஸ் கல்லூரியிலிருந்துசென்ற 16 பேரில் 14 பேரும், திரிகோணமலை செயின் யோசேப் கல்லூரியிலிருந்துசென்ற 7 பேரில் 5 பேரும் அரங்கேறினர்.

புதிய அங்கிலோபாஷா பத்திரிகை—"யாழ்ப்பாண வாரவர்த்தமானி"யென்னும் பொருளுள்ள "ஜாப்னா வீக்கிலி" என்னோர் பத்திரிகை தோன்றியிருக்கிறது.

நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?

எந்தவிதமான வாதையினாலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேனா?" என்று கேட்டுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் போது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலசுத்தி சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றால், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை யுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினாலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினாலேயே உண்டாகின்றன என்று அறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை ரோகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைரியஹீனம், அசதி, இருதயவாதை, தலைச்சுற்றல், தலைநோய், வயிற்றுப்பசம், இரைப்பையிற் புளிப்பு, ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரோகம் முதலானவை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டேபோகும். (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளினாலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் சௌக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்திரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நீக்கிச்சுகம் உண்டாக்கும்.

DOAN'S
DINNER
PILLS

12 அணா புட்டியளவு.

விலை அணா 4, 8, 12 உள்ள புட்டிகள் வாங்கலாம். 12 அணா புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணா புட்டியைவிட 5 பங்கதிகம் இருக்கும்.

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்பிலியு. ஏச். ஹல்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும். [Tam.

திருநெல்வேலியில் மாதிரிப் புகையிலைச் செய்கை—அரசாட்சியார்போறப்பில் நடத்துவரும் இச்செய்கை நற்பலன்தருமென்கிறார்கள். புகையிலைக்கன்றுகள் பூக்கும்பருவத்தின்முன் தலைப்பைமுறித்து மூறவிடுவது நம்மூர்வழக்கம். அப்படிமுறித் தடிப்பேறாத புகையிலைக்கு மானமில்லை. அரசாட்சியாரின் மாதிரிச்செய்கையிலோ எல்லாக்கன்றுகளையும்பூக்கவிட்டு முற்றமுற்ற அடியாலொடித்து உலர்த்துவார்கள். உலர்த்துவதையே நாம் விசேஷமாய்க் கவனிக்கவேண்டியது. இவ்வித புகையிலைகன்றுகளை நம்மூரார் குறைத்த எருவிட்டு உண்டாக்கினாலும் நமதுநிலத்தில் உண்டாகுமென்று நினைக்கிறோம். நமது பார்வையில் அப்படியே தோற்றுகிறது. ஆனால் உலர்த்துவதிலேயே கருமம் விசேஷமாய்த் தங்கியிருக்கிறது. அதைப்பார்த்து நம்மூரிலுள்ள நானாவகையான மண்களிலும் புகையிலை செய்துபார்த்தால் இரண்டொருபகுதியிலாவது சீமைக்கேற்றசாக்கு விளையுமென்பதில் மயக்கமில்லை. நம்மவர் நமதுமுறைப்படி புகையிலைசெய்தாலும் பூக்கவிட்டு ஐரோப்பிய முறைப்படி கீழ்ப்பாகேத்தால் ஒடித்து இம்முறை எப்பகுதிகளிலும் உலர்த்தக்கற்றுக்கொண்டால் அப்பரீட்சையால் அதிகநன்மையுண்டாகும். ஆதலால் இனி அடிக்கடிபோய் உலர்த்தும்முறையைக் கவனிக்கும்படியும் அவர்கள் விதையையும்வாங்கி நாற்றிட்டு ஒருபகுதியில்நட்டுப் பரீட்சிக்கும்படியும் நம்மவரை ஏவுகிறோம்.

கையொப்பவரவு.

Colombo.	
M. Chlliah Shroff. C. G. R.	12_50
அக்கரப்பத்தனை.	
ஸ்ரீ. R. வயிரமுத்து ஓவசியர்	4_00
சில்லாலை.	
ஸ்ரீ. இ. சூசைப்பிள்ளைவைத்தியம்.	2—00
வவனியா.	
ஸ்ரீ. G. ஆசிர்வாதம்.	2_00

இலங்கை.

இலங்கைப் பட்டாளமொன்று வேண்டுமாம்—இலங்கைப்பட்டாளமொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அதற்கு ஒருகொம்மிற்றியை நியமிக்கவேண்டுமென்றும் தமிழ்ப்பிரதிநிதிகளி லொருவரான ஸ்ரீ க. பாலசிங்கம் அவர்கள்கேட்டார். அப்படியே நியமிக்கப்பட்டது. சிலவேளை சீனர் படையெடுத்துவந்தாலோவென்று பிரதிநிதி அஞ்சுகிறார்.

உவேல்ஸ்இளவரசரின் யுத்தநிதி— இதற்குப் பங்குனிமீ 17உ வரையில் இலங்கையிற் சேர்ந்தபணம் 5,39,459 ரூபாய் 59 சதம்.

நல்லிரத்தமில்லாமைக்கு வைத்தியரின் மருந்து.

டக்டர் உவில்லியம்ஸ பிங்பில்லைசக்குறித்து வைத்தியர்கள் பேசும்போது நல்லிரத்தமில்லாமைக்கு அதுசெய்யும் அநுகூலத்தை அதிகமாக அழுத்திப்பேசுவார்கள். இந்தப் பெரியநோய்க்கும் இதனாலெழுகின்ற நோய்களுக்குமே விசேஷமாக அவர்கள் இம்மருந்தைக் கொடுத்துவருகிறார்கள்.

உதாரணமாக தூறின்நகரத்து டக்டர் பெயல்லா என்பவர் சொல்வது,— டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ் நல்லிரத்தமில்லாமைக்கு உத்தம மருந்தென நான் கொள்ளுகிறேன். வில்லோயின் நகரிலிருப்பவரும் உத்தியோகத்தாலே இளைப்பாறமுன்னர் பர்ஸ்லா பெரிய வைத்தியசாலையின் முதல் வைத்தியராயிருந்தவருமான டக்டர் வில்லோன் என்பவர் நல்லிரத்தமில்லாமையாலே பெலன்கெட்டு நோய்க்காரராயிருந்த அனேக சிறுமிகள் டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்சாலே குணம்பெற்றதை நான் அறிவேனென்று சொல்லுகிறார்.

டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ செய்கிற விசேஷதொழில் என்னவானால் புது இரத்தத்தைச் சுத்திசெய்து அதற்கு உயிர்கொடுத்துப் பசியையுண்டாக்கிப் போசணசத்தியை எங்கும் வியாபிக்கச்செய்து உடம்பு முழுவதையும் பெலப்பிக்கின்றது. இதனாலே புதிய சிவந்த செழித்த இரத்தத்தை விரைவிலுண்டாக்கி இதனாலே தன்தொழிலைநடத்தி உலகத்திலே ஆயிரக்கணக்கான ஆரோக்கியங்களைச் செய்துகொண்டுவருகின்றது. மிக்க கேடானதிலேயிருள்ள நல்லிரத்தமில்லாத நோயை மாத்திரமன்றி சாதாரண பெலவீனத்தையும் நரம்புத்தளர்ச்சியையும் சுபாலத்தையும் செமியாக்குணத்தையும் தலைவிடியையும் முதுகுநோவையும் காட்டுக்காய்ச்சலையும் பெண்களுக்குரிய விசேஷ நோயையும் மாற்றிக்கொண்டுவருகிறது.

இலங்கையிலுள்ள மருந்துவியாபாரிகளெல்லாரும் டக்டர் உவில்லியம்ஸ பிங்பில்லைசப் போத்தல் ஒன்று 2 ரூபாயாகவும் 6 போத்தல்கள் 11 ரூபாயாகவும் விற்றுவருகிறார்கள். டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்லைசச் சாப்பிட நீ இன்றைக்குத் தொடங்குவாயானால் உன் ஆரோக்கியமும் இன்றைக்கே தொடங்கும்.

யுத்த தந்தி.

பிரான்சிய பெல்சிய யுத்தம்.

பங்குனிமீ 13உ வொம்பாட்டுக்கிழக்கில் பிரான்சர் தமதரணைகளுக்குமுன் 100 யார்தூரத்தில் ஓர் சேர்மனியகோட்டையைப் பிடித்தார்கள்.

பிரித்தானியர் எம்பினேத்என்ற சிற்றூரைப் பிடித்து சேத்சப்பல்பக்கம்போய்ச்சேர்மனியரின் இரண்டு எதிர்ப்புகளைத்தடுத்து [illegible] களில் ஓர்பாகத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அங்கு 400 சேர்மனியர் சிறையாக்கப்பட்டனர். 17000 பேர் சேர்மனியருக்குச்சேசமாயிருக்கலாமெனக் கணக்கிடப்படுகிறது. அவர்களில் சிலர் உத்தியோகஸ்தர்.

பியேத்தருக்குத் தென்மேற்கில் சேர்மனியர் சிலவீடுகளை அரண்படுத்திவைத்திருக்கப் பிரித்தானியர் அதைப்பிடித்தனர். அன்று 1000 சேர்மனியரைச் சிறைபிடித்து அனேக மெசின்பீரங்கிகளையுங் கைப்பற்றினர்.

சேவ்சேப்பேல் என்றவூர் ஐப்பசிமீ 26உ சேர்மனியரால் பிடிக்கப்பட்டது. அதுமுதல் அடிக்கடி அவ்விடத்தில் சண்டைநடந்துவருகிறது.

பிரான்சர் மெலின்குன்றின்சாரலில் முன்னேறி 150 சேர்மனியரைச் சிறைபிடித்தனர்.

பெல்சியபடை ஈசர்க்கால்வாயின் வலைவில் தாங்கள் பிடித்தஇடத்தைப் பெலப்படுத்திக்கொண்டது.

பிரித்தானிய சேனையடைந்த செயத்தினால் அருண்டு சேர்மனியர் இபிரேஸ்பக்கத்திலும் பாஸசேப்பக்கத்திலும் பெருந்தொகையான சேனைகளைக்கொண்டுபோய் நிறுத்துகிறார்களென்றும் 17 இஞ்சுப் பீரங்கிகளை மிடில்கேர்க் பட்டினத்திற்குச்சமீபத்தில்ஸ்தாபித்து நியூபோட்டுக்குச் செல்லும் வழியிலிருக்கும் பலின்பிரக்கி என்றவூரின் மதகுகள்மேல் சுட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும் ஒல்லாந்தபத்திரங்கள் கூறுகின்றன.

14உ பெல்சியர் பிரான்சிய கனத்தபீரங்கியின் உதவிபெற்று ஈசர் ஆற்றுப்பக்கத்தில் முன்னேறிப்போய் டிக்ஸ்மூட்டுப்பக்கத்தில் ஓர் சுங்காலைக்குச்சமீபத்தில் ஓர் நல்லஇடத்தைக் கைப்பற்றினர். சேர்மனியர் இப்பிரயன்மேல் பீரங்கி சுட்டதினால் அனேக பொதுமனிதர் கொல்லப்பட்டார்கள். சுவாஸ்சோனில் மேற்றிராசனக்கோயிலையும் அதையடுத்த வீடுகளையும் சேர்மனியர் பீரங்கியாற்சுட்டனர்.

ஷம்பாஞ்பக்கத்தில் சேர்மனியர் இருமுறை எதிர்த்தும் பிரான்சர் துரத்தியடித்துப் பல அகழரண்களைக் கைப்பற்றினர். ஒருஅரணில் 100 சேர்மனியர் மாண்டுகிடந்தனர். சாமான்களும் அகப்பட்டன. மொத்தத்தில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் 1720 பேர். கடைசி மூன்றுதினத்திலும் பதினாயிரவருக்குமேலே சேர்மனியருக்குச் சேதமுண்டாயிருக்குமென மதிக்கப்படுகிறது.

டான் புகைரதத்தொடரொன்றைப் பிரித்தானிய ஆகாயவிமானங்கள் இன்றுகாலை வெடிக்கச்செய்துவிட்டன.

15உ இப்பிரசுக்குத்தெற்கில் செந்தேனுவாவில் சேத்திரவு பிரித்தானியர் கடுமையாய்த் தாக்கப்பட்டனர். தொடக்கத்தில் சொற்பமாய்ப் பின்னிட்டார்கள். ஆனால் பிறகு எதிர்த்துவந்து இழந்த இடத்தில் ஒருபாகத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

கீழ் ஆர்க்கோனில் பிரான்சர் பலதினங்களாய்ச் சண்டைசெய்து ஓர் பீடபூமியையும் வேக்குவா என்றவூரில் ஓர்பாகத்தையும் பிடித்தது முக்கியமான பிரயோசனத்தைத் தருகிறது. சென்றவருஷம் புரட்டாசிமாசம் சேர்மனியர் அவ்விடத்தைப் பிடித்துக்கொண்டுதான் வேர்தேன் பட்டினத்தைச்சூழ முயன்றார்கள். அவ்வூர் ஆயிரம் அடி உயரமுள்ள ஓர் குன்றின்மேலிருக்கிறது. கற்பாறையிற் குடையப்பட்ட கீழறைகளிலிருந்துகொண்டு சேர்மனியர் பீரங்கிக்குண்டுகளுக்குத் தப்பித்துக்கொண்டிருந்தார்கள். சேர்மனியர் அவ்வூரைச் சரியானகோட்டையாய் மாற்றியிருந்தார்கள். கீழறைகளில் பீரங்கிகூடச் சிறுஆயுதசாலைகள் எல்லாஞ் செய்திருந்தனர். பிரான்சர் மாசிமீ 17உ முதல் தாக்கி அவ்விடத்தின் வசதியைக் கண்டுபிடித்து 28உ யும மறுபடி தாக்கினர். கனத்த பீரங்கிகளைச்சுட்டுப் பலப்படுத்தப்பட்டிருந்தபாகங்களைப் பாழாக்கிக் கைப்பற்றினர். சேர்மனியர் மறுபடியும் அதைக்கைப்பற்ற முன்னேறியுங் கூடாமற்போயிற்று. பிரான்சரும் பலமுறை பின்னிட்டும் ஈற்றில் அவ்வூருள் நுழைந்தனர். பின்பு வீடுவீடாய்நுழைந்து சேர்மனியரைத்துரத்தினர். ஆயினும் அவ்வூரின் ஓர்பாகம் இன்னும் சேர்மனியர் கையிலிருக்கிறது.

16உ செந்தெனுவாவில் பிரித்தானியர் நேற்று இழந்தஅரண்களை இன்று பிடித்துக்கொண்டார்கள்.

ஆராசுக்கு வடக்கில் பிரான்சர் முன்னேறிப்போய 100 சேர்மனியரைச் சிறைபிடித்தனர். ரொத்வென்கூர்பக்கத்தில் சேர்மனிய அகழரண்களைச்சில்வற்றை வெடிமருந்தால் நாசமாக்கினர்.

ஷம்பாஞ்பக்கத்தில் சேர்மனியர் அல்பேர் என்றவூருக்குச் சமீபத்தில் பிரான்சு அகழரண்களை வெடிமருந்தாற் சேதப்படுத்தி அவைப்பிடித்தும் மறுபடியும் அதைப் பிரான்சர் பிடித்துக்கொண்டனர்.

17உ சேர்மனியர் லோரேத் என்னுமிடத்தில் தாம் பறிகொடுத்த அகழிகளைத் திரும்பக் கைப்பற்றத் துணிந்தும் வாய்க்கவில்லை. பிரான்சர் பேரஜோரில் முன்செல்லுகின்றனர்.

18உ அருஸ் அல்பேட் என்றஇடங்களில் சேர்மனியர் தாங்கள் இழந்த இடங்களை மறுபடி பிடிக்கமுயன்றும் பலிக்கவில்லை. சாம்பேனில் பெத்சோவன் என்னுமிடங்களுக்கிடையில் பிரான்சர் செயம்பெற்றனர்.

பிரித்தானிய ஆகாயகமனிகள் ஆல்டென்றில் மிக முயற்சியாயிருக்கின்றனர். சேர்மனிய ஆகாயவிமானங்கள் அவைகளைத் துரத்தமுடியவில்லை. ஈசர் என்னுமிடத்தில் அங்கிலோ பிரான்சிய சேனைகளுக்குதவியாகக் கப்பற்படையுங் குண்டுப்பிரயோகஞ்செய்கிறது. பெல்சியர் அவ்விடத்தில் செயம்பெறுகின்றனர். லீஸ் நதி என்னுமிடங்களில் யுத்தம்நடக்கிறது. சோம்பேர்யாம், ஏருணி, மரிகோட் என்னுமிடங்களில் சேர்மனியர் குண்டுப்பிரயோகஞ்செய்து அதிக சேதம் விளைத்தனர். கொன்ஸ்பினால என்னுமிடத்தில் ஒரு புகைரதஸ்தானத்தைப் பிரான்சிய ஆகாயவிமானி ஒருவன் குண்டுபோட்டுடைத்தான்.

சியூசுபல் என்னுங்கிராமத்தைப் பிடித்ததினால் அதன்பின் 10ம் 11ம் 12ம் 13ந் தேதிகளில் நடந்த யுத்தங்களிலும் ஜெனறல் [illegible]வரின்கீழுள்ள இந்தியசேனைகள் மிகு வீரவேசத்துடன் போர்புரிந்து செயம்பெற்றனர். அதில் அதிக சேதமுண்டானாலும் சேனைகள் அஞ்சவில்லை. இந்தியசேனைகளின் தீர்மானமும் கஷ்டங்களைச் சகிக்குந்தன்மையும் போர்க்குணமும் புகழ்ச்சிக்குரியதாம்.

19உ கலேநகர்மேல் ஒரு செப்பிளின்பறந்து வெடிக்குண்டுகளை எறிந்தது. அதனால் அங்குள்ள புகைரத ஸ்தேசனில் வேலைபார்க்கும் எழுபேர் இறந்தனர்.

இந்தியசேனைகள் காட்டிய தீரத்தைச் சேர் சர்ன்பிரான்சு மெச்சி வந்தனங்கூறுகிறார். இந்தியசென்று சட்டிப்படை சண்டையின்நடுவில்நின்று சண்டைசெய்தன. சேர்மனியரில் 20000 பேருக்குமேல் சேதமாயினர். அவர்களை ஓடும்படி நமது காலாட்படைசெய்ததுடன் நமது பீரங்கிப்படையும் அவர்களைக்கொன்றுகுவித்தன. பிரித்தானியரில் அனேக உத்தியோகஸ்தர் இறந்துபோய்விட்டனர். அதில் சேனைகள்காட்டிய தீரத்தால் பலர் வெகுமதி பெறுவார்கள். அனேகரது பெயர்கள் கௌரவமாக அறிவிக்கப்படும். நாம் வெற்றிபெற்றஇடத்தைச் சத்துருக்கள் கைப்பற்றாவண்ணம் பலமாய்க் காத்துவருகிறோம்.

22உ சோயன என்னுமிடத்தின் ஆசனக்கோயிலுக்கு மறுபடியுஞ் சேர்மனியர்குண்டுப்பிரயோகஞ்செய்தனர். அதனால் அதற்குமிகுசேதம்.

சனிக்கிழமை போக்ஸ என்றஇடத்தில் சிறிய பெரிய ரெயின்சாக்காலோ என்றஇடங்களை நாம் இழந்துவிட்டோம். ஆயின் சிறிய ரெயின்சாக்காலோவை மறுபடி மீட்டுவிட்டோம். பெரிய ரெயின்சாக்காலோவிலும் அநுகூலமடைந்தோம்.

21உ காலை ஒன்றரைமணிக்கும் மூன்றுமணிக்குமிடையில் நாலு செப்பிளின் ஆகாயக்கப்பல்கள் ஓயிஸ்வெலிருந்து கொம்பயினுக்குமேலால் பரீஸ பட்டினம்வந்தது. இரண்டு பட்டினத்தைக்கிட்டிச்சேரமுன் திரும்பிவிட்டன. ஒன்று இக்கோயிசக்கும் மற்றது மான்தேசக்கும் டசன்கணக்கான குண்டுகளைப்போட்டன. எழுபேர் காயப்பட்டனர் ஒருஆளுக்கு ஆபத்தானகாயம். பூமிகள் சொத்துக்கள் சேதமாயின. பிரான்சிய பீரங்கிக்குண்டு ஒரு செப்பிளினிற்பட்டதாகத்தெரிகிறது. பிரான்சிய விமானங்கள் செப்பிளின்களைத் துரத்தின. கொம்பயினைவிட்டுத் திரும்பிச்செல்லுகையில் ஒரு டசின் குண்டுகளைப் போட்டுவிட்டுப் போயிற்று. சேதம் அதிகமல்ல.

22உ நாடர்டாம் டிலோரேத் என்றஇடத்தில் சேர்மனியர் நம்மைத்தாக்கிச் சில அரண்களைப்பிடித்துக்கொண்டாலும் நாம் பதிலுக்குத்தாக்கி அவைகளை மீட்டுவிட்டோம்.

லாபாய்செல்லி என்னுமிடத்தில் நாம்சுரங்கம் வைத்துச்சண்டைசெய்வது இன்னும்நடந்துகொண்டிருக்கிறது.

ரீம்ஸநகர்மேல் ஞாயிற்றுக்கிழமை 50 வெடிக்குண்டுகளைச் சேர்மனியர் பிரயோகித்தனர். ஆர்கோனில் இருமுறை சத்துருக்களை முறியடித்தோம்.

பாக்டேல் என்னுமிடத்தருகே மூன்றுசுரங்கங்களை வெடிக்கச்செய்தோம். இரண்டு பட்டாளங்கள் ஒருஅரணைத்தகர்த்து அந்தஇடத்தை வசப்படுத்திக்கொண்டன. அவ்விடத்திலிருந்து நம்மைப் பின்னிடச்செய்யச் சேர்மனியர் உக்கிரமாய்த் தாக்கியும் பலிக்கவில்லை. அவ்விடத்திற்கு வடக்கே கால்மைல்தூரத்தில் சேர்மனியருஞ் சுரங்கம்வைத்து நம்மைத்தாக்கினர். அப்போது கைகலந்த சண்டைநடந்தது. சேர்மனியர் சேனைகளைக் கொண்டுவந்துகுவித்து நம்மைத்தாக்கியும் நாம் அவர்களைப் பின்தள்ளிவிட்டோம். அவர்கள் பின்வாங்கிச்சென்றபோது நமது பீரங்கிப்படை அவர்கள்மேல் குண்டுகளைப்பிரயோகித்து அதிக சேதம்விளைத்தது.

23உ கொட்டர்டாம் டிலோரேத் என்னுமிடத்திலுள்ள உயர்ந்தபூமியிலிருக்கும் அரண்களுக்காக இருபக்கத்தாரும் முயற்சியாய் யுத்தம்புரிந்தும் அவ்வரண்களில் 10 யார்தூரம்நீங்க மிகுதியாவும் நம்வசமிருக்கின்றன.

லெஸ்எபார்சஸ் என்னுமிடத்தில் தாமிழந்த இடங்களைப்பிடிக்க ஐந்துமுறை சேர்மனியர் நம்மைத்தாக்கியும் நாம் திருப்பியடித்தோம் என்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

23உ வில்லர்ஸ காட்டரேட்ஸ் என்னுமிடத்தின்மீது நேற்றுமாலை செப்பிளின் பறந்துசென்று ஒருகுண்டைப்போட்டது. செப்பிளின் நடமாட்டத்தைப் பரீஸ்பட்டினத்தாருக்கு அறிவிக்கப்படவே தெருவிலுள்ள வெளிச்சங்களெல்லாம் இரவு ஒன்பதுமணிக்கு அணைக்கப்பட்டன. பொலிசர் எச்சரித்தும் தெருக்களில்நின்று சனங்கள் செப்பிளின்வரவை எதிர்பார்த்தனர். ஆயினும் செப்பிளின் வரவில்லை. பின்பு 10 மணி 40 நிமிஷத்துக்கு மறுபடியும் விளக்கேற்றபபட்டன. சிறிதநேரத்தின்பின் மீண்டும் எச்சரிக்கப்பட்டது. ஆயஸ்நதிமீது இரண்டு செப்பிளின்கள்காணப்பட அவைகளிலொன்று அமீன்ஸநகரை நோக்கியும் மற்றொன்று சாம்பேன்நகரைநோக்கியும் செல்வதாய்ச் சமாச்சாரம்வந்ததினால் பரிசிலுள்ள வெளிச்சங்கள்யாவும் திரும்ப அணைக்கப்பட்டன.

பரீசின்மீது பயனின்றிச் செப்பிளின்வெடிக்குண்டெறிந்துபோனதற்காகப் பிரான்சியஆகாயவிமானிகள் புறப்பட்டுப் பெல்சியத்திற்கும் அல்சேஸ்மாகாணத்திற்குமிடையிலுள்ள புகைரதஸ்தேசன்மேலும் 16 புகைரதப்பாலைகள்மேலும் பறந்துசென்று பகலும் இரவும் வெடிக்குண்டுகளை எறிந்தன. சேர்மனியர் தங்குமிடம் ஆகாயவிமானங்கள் வைக்குமிடம் ஆயுதஸ்தானங்களாதிய இடங்களின்மேல் வெடிக்குண்டுகள் போட்டனர். மேலும் சேர்மனியவிமானங்களையும் பின்தொடர்ந்துசென்றனர்.

லாபாய்செல்லி என்னுமிடத்தில் தோற்றுப்போனதால் சேர்மனியர்கோபங்கொண்டு தமது விமானங்களையனுப்பி வேவுபார்த்தும் ஆல்பேட்நகரின் சிவில்ஆஸ்பத்திரியைப் பீரங்கியாற்தகர்த்துவிட்டனர். அதனால் ஐந்து வயோதிபரும் ஒரு ஸ்திரியும் பலத்த காயமடைந்தனர்.

ரீம்ஸநகரைச் சேர்மனியர் தகர்த்தனர். அன்றியும் அந்நகரின்மீது ஓர் சேர்மன் ஆகாயவிமானம்பறந்து வெடிக்குண்டுகளை எறிந்தது. அதனால் ராணுவத்திற்சேர்ந்த மூன்றுபேர்காயப்பட்டனர்.

லாபாத்டேல் என்னுமிடத்தில் நாம் கைப்பற்றிய இடத்திலிருந்து நம்மைத் துரத்திவிட இரு சேர்மனியர் கடுமையாய்த்தாக்கியும் நாம் பின்தள்ளிவிட்டோம்.

24உ அருஸநகருக்குவடக்கே காரன்சி என்னுமிடத்தில் ஓர் சேர்மனிய அரணையழித்து அதை வசப்படுத்திக்கொண்டோம்.

சாய்சனஸ்நகரைச் சேர்மனியர் தாக்கமுயன்றும் நமது பீரங்கிப்படை தடுத்துவிட்டது.

வான்குவாசில் எரியுந்திராவகத்தைச் சேர்மனியர் வாரியிறைத்ததினால் நாம் 15 யார்தூரம் பின்னிட நேரிட்டது.

ஆர்கோனில் ஒரு கிராமத்திலிருந்த ஒரு வரிசைஅரண்களை நாம் பிடித்துக்கொண்டோம்.

சீதளோஷ்ணநிலைமை சௌகரியமாயிருந்ததினால் சேர்மன்விமானங்கள் மிகு சுறுசுறுப்புக்காட்டினவென்றும் மூன்றுஸ்திரீகளையும் நான்குமனிதரையும் கொன்றதுதான். அவர் பெற்றலாபமென்றும் மிகஉயரமாய் விமானிகள் பறந்ததினால் குறிபார்த்துச்சுட முடியவில்லையென்றும், நமதுவிமானிகளுக்குத் தப்பிக்கொள்ள இப்படிச்செய்ததினால் நமக்குக்கௌரவமேயென்று செர்ஜான்பிரான்ஸ் தமதறிக்கையிற் கூறுகிறார்.

சமீபத்தில் நடந்தசண்டையில் ராணுவத்தலைவர் 500 பேருக்கு அதிகமாகச் சேதமடைந்தனர். தலைவர் போரில் தம்முயிரைப் பொருட்படுத்தாதிருந்தாலும் சத்துருக்களிடமிருந்து அரண்களைப் பிடித்தபின் எவ்வாறுமுன்செல்லலாமென்றுயோசிக்க ஒன்றுகூட்டி முன்சென்றதினாலேயே இவ்வளவுசேதம் நேரிட்டதாம். அத்தருணம் சத்துருக்களின் குதிரைநர அவர்கள்மேல் துப்பாக்கிப்பிரயோகஞ்செய்ததும் பீரங்கிகளும் அவர்கள்மேல் குண்டுமாரிபொழிந்ததுமே அவர் சேதமானகாரணமாம், அரண்களிலிருந்த சத்துருக்களை ஈட்டியால்தாக்கி எதுவிததிலும் ஓட்டிவிடவே அவர் தீர்மானித்திருந்தனர். பிரித்தானியர் காட்டிய வீரத்தைப் பிரான்சர்மெச்சிச்சமாச்சாரமனுப்பினர்

24உ ஈசர்கால்வாயின வலக்கரையில் பெல்சியபடைவகுப்பொன்று முன்சென்றது. அதன்இடக்கரையில் ஓர்அரணை வேறொருவகுப்புப் பிடித்துவிட்டது.

ஊாடன்ஸ்வெல்லர் என்னுமிடத்தில் இரண்டாம்வரிசைஅரணகளை நாம் வசப்படுத்தினோம். உத்தியோகஸ்தருட்பட பலபோர்வீரரைக் கைதியாக்கினோம்.

நாடர்டாம்டிலேர்ரேத் என்னுமிடத்திற்குத்தெற்கேயுள்ள ஓர் முக்கியமானஸ்தலத்தைப் பிரான்சிய சட்டிக்காலாட்படையொன்று பிடித்துவிட்டது. பின்பு பீரங்கிப்பிரயோகஞ்செய்து சேர்மனியரின் 4 வரிசைஅரண்களைப் பிடித்துவிட்டது. சேர்மனியர் நம்மைப்பின்தள்ளமுயன்றும் பலிக்கவில்லை, லெப்தினன் பாயஸ்என்பவர் 12 போர்வீரரும் கைத்துப்பாக்கியுடனுமிருந்தும் பக்கப்பலம் வரும்வரையில் சமாளித்துவிட்டார்.

பின்புசேர்மனியர் பலமான பீரங்கிப்பிரயோகஞ்செய்தனர். அதனால் நமதுசேனைகளுக்கதிக சேதம். ஆயினும் நமதுதுருப்புகள் தம்வசமுள்ள இடங்களைவிடாமல் கைகலந்த சண்டைசெய்து முழுவதையும் பிடித்துக்கொண்டனர். அருகக்குத்தேயுள்ள நாடர்டாம்டிலாரேத்திலும் போர்சிசாரிலும் இரவில்சேர்மனியர் நம்மைத்தாக்கினதைத் தடுத்துவிட்டோமென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

இன்று பிரித்தானிய ஆகாயப்படைகள் புறப்பட்டுச்சென்று அண்டர்வேப்புக்கருகிலுள்ள கோபகேன என்னுமிடத்தைத்தாக்கின. காலநிலை விபரீதத்தால இரண்டுவிமானங்கள் திரும்பிவிட்டன. ஒருவிமான யந்திரத்தில நேரிட்ட சேதத்தினால் ஒன்று ஒல்லாந்தில் இறங்கிவிட்டது. ஆயினும் இரண்டுவிமானிகள் கொப்கேனிற் சப்மரையின் செய்யப்படுமிடத்தின்மேல் ஐந்து வெடிக்குண்டுகளை எறிந்தன. அதனால் அதிகசேதம் நேரிட்டிருக்குமென்று நம்பப்படுகிறது. அங்கிருந்த 2 சப்மரைன்கள் தீப்பற்றி எரிவதைக் கண்டார்கள். வேறு 5 சப்மரைன்கள் கடலில்இறக்கிவிடும் பக்குவத்திலிருந்தன. மூடுபனியால் வழியைக் கண்டுபிடித்துச் செல்லக்கூடாதிருந்தது. சேர்மனியர் அவ்விமானங்கள்மேல் கடுமையாய்ப் பீரங்கிப்பிரயோகஞ் செய்தனர். வெடித்தண்டால் சேர்மனியரில் நாலுபேர் கொல்லப்பட்டு 16 பேர் காயப்பட்டனராம். வேவுகாரியொருத்தி சத்துருக்களுக்குச் சமாச்சாரம் அறிவித்ததற்காக அவளை லூன்விலவியிற் சுட்டுக்கொல்லப் பட்டது.

துருக்கி.

பங்குனிமீ 13உ ஐக்கியஅரசாளுடைய கப்பல்கள் சிமர்னாப்பட்டினத்தைத்தாக்கினால் அதைச்சுற்றி அகழ்களால் அரணாக்கப்பட்ட பாளையமாக்கப்படுமென்றும் அதனால் அவ்வூர்ச்சனங்கள் உள்நாடுகளுக்குப் போய்விடவேண்டுமென்றும் அவ்வூர்த் தேசாதிபதி தெரிவித்தார். பிறதேசஸ்தானாபதிகள் ஓர்பாகத்தை நடுநிலைமைஸ்தானமாக நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தேசாதிபதி அதைக்குறித்து யோசிக்கிறார்.

சேர்மன் குரூசர்க்கப்பலாகிய கொயெபென் தனது 10—11 இஞ்சுப் பீரங்கிகளைக் கரையிலிறக்கித் துருக்கிய கடற்படை உபயோகத்திற்குக் கொடுத்துவிட்டு நிராயுதபாணியாய் நிற்கிறது.

சேர்மனியர் அங்குபோய்ச் சேர்ந்திருப்பதால் முன்னிலும் இப்போ துருக்கியர் நன்றாய்ச்சுடுகிறார்கள். ஆனால் வெடிமருந்துகள் பலமற்றவை அனேகதடவை குண்டுகள் வெடிக்கிறதில்லை.

சிமர்னாமேல் ஐக்கிய அரசகப்பல்கள் சுட்டது கோட்டைகள் பதிற்சுட்டன.

டரையம்ப் என்ற பிரித்தானிய போர்க்கப்பல்மேல் குண்டுவிழுந்தும் சேதமில்லை. அக்கப்பலின்குட்டால் கோட்டைக்கதவுகளும் கட்டிடங்களும் 100 அடி உயரத்தில் தூக்கியெறியப்பட்டதாம். அங்குள்ள மூஸ்லீம்கள் உள்நாட்டுக்கு ஓடுகையில் கிரேக்கர் தப்பிப்போகாதபடி படகுகளைக் கொளுத்திவிட்டுப் போகிறார்கள்.

19உ டார்டனலீசில் "போவெத"என்னும் பிரான்சியகப்பல்ஓர்வெடிச்சுரங்கத்தில்முட்டிமூன்று நிமிஷத்துள் அழிவாக்கப்பட்டது. அதிலுள்ளோர் யாவரும் மாண்டனர். அங்கே பல வெடிச்சுரங்கள் அகற்றப்பட்டன.

19உசேர்ந்த அங்கிலோபிரான்சியகப்பல்கள் நாற

ல் என்னும் கோட்டையைத்தாக்கப் பலகுண்டுகளைப் பிரயோகித்தன.

இன்றுகாலை குயீன்எலிசபேத், அகமேனன், இன்பிளெக்சிபிள், லார்ட்நெல்சன் என்னுங்கப்பல்கள் அங்குள்ள ஐந்துகோட்டைகள்மேல் குண்டுப்பிரயோகஞ்செய்தன. பிரின்ஜோர்ஜ், திறையம் என்னுங்கப்பல்கள் மூன்று பீரங்கி மேடைகள்மீது குண்டுகளைப்பொழிந்தன. கோட்டையிலிருந்து அக்கப்பல்மீது அனேககுண்டுகள் பிரயோகிக்கப்பட்டன. கோலோயிஸ், சார்லிமாங், பேர்நேர் என்னுங்கப்பல்கள் கோட்டைக்குஅணித்தாய்நின்றுகுண்டுப்பிரயோகஞ்செய்தன. நாலு கோட்டைகளிலின்று கடுமையாகக் குண்டுகள் பிரயோகிக்கப்பட்டன. அவை கப்பல்களிற்பட்டுத் தாக்கின. வெஞ்சாசி, இறிசிஸ்ரிபிள், ஓஷன், அல்பியோன், கவிச்சர், மஸ்றிக் என்னுங்கப்பல்கள் டாடனல்ஸின் உட்பகுதியிற்சென்று மற்றக்கப்பல்களுக்குத்துணைசெய்தன. சோன்டர், நாபிடா, ஹெவிட்பார், மஜியா, ஸிமென்வீக என்னுங் கோட்டைகளிலிருந்து குண்டுகள் இக்கப்பல்கள்மீது பிரயோகிக்கப்பட்டன.

இறிசிஸ்ரிபிள், ஓஷன் என்னும் இருஅங்கிலேய பாரிய யுத்தக்கப்பல்கள் வெடிக்குண்டுமுட்டி அழிவாய்ப்பட்டன.

இன்பிளெக்சிபிள் என்னுங்கப்பல் சிலபாகமுடைந்து பழுதுபார்க்கவேண்டிய ஸிதியிலிருக்கிறது. கலிவியல் குண்டுப்பிரயோகத்தால் சிறிது சேதமடைந்தது.

இரேசிஸ்டபிள் என்னுங்கப்பல் 15 ஆயிரம் டன் நிறையுள்ளது. அதில் 12 இஞ்சுப்பீரங்கிகள் 4ம், 6 இஞ்சுப்பீரங்கி 12ம், இருந்தன. ஒருமணித்தியாலம் 21 மைல்தூரம் ஓடும்வேகமுடையது. ஓஷன் என்றகப்பல் 13 ஆயிரம் டன்நிறையுள்ளது. அதில் 12 இஞ்சுப்பீரங்கிகள் 4ம், 6 இஞ்சுப்பீரங்கிகள் 12ம் உண்டு. ஒருமணித்தியாலம் 21 மைல்தூரஞ்செல்லும் வேகமுடையது.

கப்பற்படையின் தலைமையைவகித்த வைஸ் அட்மிறல் கார்டென் 16உ நோயால் அசௌக்கியமாய்விட்டதினால் அவரிடமாக வேறொருவர் நியமிக்கப்பட்டார்.

கப்பலின் உள்ளே வெடியுண்டானதினால் அக்கப்பலிலிருந்த மாலுமிகளில் அனேகர் மாண்டுபோயினர்.

மிதக்குஞ் சுரங்கத்திற்பட்டே இரு பிரித்தானிய கப்பல்களும் மூழ்கின. கோட்டைகள் பலமாய்ச்சுட்டும் அவ்விரண்டுகப்பலிலுமுள்ள மாலுமிகளில் அனேகர் இரட்சிக்கப்பட்டனர்.

கோட்டைப் பீரங்கிகளால் கலாய் என்ற வேறோர் பிரான்சக்கப்பலுக்குஞ்சேதமுண்டாயிற்று.

20உ சென்றவாரம் யோசம்போன கடல்ராணுவ உத்தியோகஸ்தரின்தொகை 515. சேதம்போன அங்கிலேயரின் இரண்டுகப்பல்களுக்குப் பதிலாய் வேறிருகப்பல்கள் இங்கிலந்திலிருந்து அனுப்பப்பட்டன. பிரான்சரும் சீரியாவிலின்று "வெஜுஸ்றிக்குவாரேற்" என்றகப்பலை அழிந்தகப்பலுக்குப்பதிலாயனுப்பினர்.

ருசிய கடற்படை பொஸ்பரஸ் சலசந்திக்குவடபக்கமாய்வந்திருப்பது கொன்ஸதாந்திநோபிளில் திகிலை உண்டாக்கியிருக்கிறது.

போஸ்பரசுக்குவடக்கேருசியகப்பற்படை [illegible].

டாடனல்ஸில் கோட்டைகளுக்குப் பீரங்கிப்பிரயோகஞ் செய்யப்பட்டது. 18உ கரோல்கோட்டைகளை அங்கிலோ பிரான்சியரின் 10 கப்பல்கள்சேர்ந்து சுட்டதினால் கோட்டைகள் அமைதியாயின. நாலுகோட்டைகள் பலமாய்ச்சுட்டன. சிலகப்பல்களிலுங் குண்டுபாய்ந்தன.

22உ பிரித்தானியகப்பல்களில் 12ம் பிரான்சியகப்பல்களுஞ்சேர்ந்து டார்டனல்ஸ சலசந்தியின் மிகக் குறுகியஇடத்திலின்று மிகப்பலமான கோட்டைகளைத்தாக்கியதில் கோட்டைகளுக்கு எவ்வளவுசேதம் நேரிட்டதென்றுதெரியவில்லை.

குயீன் எலிசபேத் என்னும் சண்டைக்கப்பலிலிருந்து பிரயோகிக்கப்பட்ட ஒருகுண்டு கிலித்பகார என்னும் முக்கியமானகோட்டையின் மருந்தறையை வெடிக்கச்செய்தது. அத்தருணம்ஓர் மலையளவு உயரத்தில் தீஎழும்பினது.

கோட்டைகளின பீரங்கிகளிலும் கப்பற்பீரங்கிகள் மேன்மையானவையாயிருந்தன. சிலமணிநேரத்துள் கோட்டைகள் அடக்கப்பட்டன. மிதந்துசெல்லும் எண்ணற்ற சுரங்கங்களைத் துருக்கியர் சலசந்தியிற் போட்டுவிட்டனர். அவைகளால் மூன்றுகப்பல்கள் சேதமானது பெரியசேதமாகும். ஆயினும் அப்படி நடக்குமென்பது எதிர்பார்த்திருந்த விஷயந்தான். முன் எண்ணியிருந்ததிலும் இது பெரியகாரியமல்ல. முடிவில் வெற்றிகிடைக்குமென்பது நம்பிக்கை.

சலசந்தியில் கட்டுக்காவல்களமைத்துப் பலபீரங்கிகளும் மறைத்துவைக்கப்பட்டிருக்கின்றன. கனத்த காவிட்சர் பீரங்கிகளையும் வேறுபலபீரங்கிகளையுந் துருக்கியரும் செர்மனியருந்திறமையாயமைத்திருக்கிறார்கள். அதனால் மிகு தொந்தரவுண்டாகிறது. அழிந்துபோன சண்டைக்கப்பலுக்குப் புதிதாய் வேறுகப்பல்களையனுப்பித் தக்க கடற்பலம் சலசந்தியில் தயாராயிருப்பதினால் கருமத்தைத் திருத்தியாய்முடிக்க ஐக்கிய ராசாங்கத்தார் கருதியிருக்கின்றனர். அழிந்த சண்டைக்கப்பல்கள்மிகப்பயனுள்ளனவாயினும் சமீபத்தில் செய்யப்பட்டனவல்ல. பிரித்தானியகப்பல்கள் 1897ம் 1898ம் வருடங்களிலும் பிரான்சியகப்பல் 1896ம் வருடத்திலுஞ் செய்யப்பட்டவை.

24உ சுவேஸ்கால்வாயில் எல்குப்பிரி என்னுமிடத்துக்கருகே சத்துருக்களிருப்பதை அங்கிலோ காவற்படைகண்டன. ஆயிரம் துருக்கியரும் அவரின் சிறிய குதிரைப்படையும் இருப்பதை நமது ஆகாயவிமானிகள் கண்டனர். ஆதலால் அவ்விடத்துள்ள நமதுபீரங்கிகள் துருக்கர்மேற்சுட்டுப் பின்வாங்கச்செய்தன. அவர்கள் கிழக்கே எட்டு மைல்தூரத்திற்போய்த் தங்கினர். இன்றுகாலை நமது பீரங்கிப்படையொன்றுசென்று துருக்கியரைத்தாக்கி முறியவடித்தது. ஆகவே அவர்கள் பின்னிட்டுச்செல்லுகின்றனர். நாலு செர்மனிய தலைவரின்கீழ் பிரேஸ்பா என்னுமிடத்திலிருந்து நேராக ஒரு துருக்கசேனை 12 மைல்பிரயாணஞ் செய்தவந்ததாய் ஒரு கைதி சொல்லுகிறான்.

டாடனல்ஸ்சலசந்தியில் நேற்றும் புயற்காற்று வீசினமையால் அங்கு யுத்தக்கப்பல்களின் நடமாட்டம் தடைப்படுகிறது. அங்குள்ளசிலகோட்டைகள் அழிக்கப்பட்டுப் போனபோதிலும் கோட்டைகளிலிருந்து பீரங்கிப்பிரயோகஞ்செய்ததைக்கவனிக்கையில் அங்குமிங்கும் கொண்டுபோகும்படி தண்டவாளங்களில் செர்மன் ஹாவிட்சர் பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது நிச்சயமாயிருக்கிறது.

மூன்றுநாட்களாய்ப் பலத்த புயற்காற்றுவீசினமையால் கடல் கொந்தளிப்பாயிருக்கிறது. ஆகலால் டெனிடாஸ என்றதீவின் பின்புறத்தில் 10 யுத்தக்கப்பல்கள் நங்கூரம் போட்டுநிற்கின்றன. கோட்டைகளைத் துருக்கியர் பழுதுபார்த்துப் புதியபீரங்கிகளை அமைக்கிறார்களென்று தெரியவருகிறது.

கார்கஸ்பக்கத்தில் அலாஷகர்ட்என்னுமிடத்தில் துருக்கியர் முறியடிக்கப்பட்டனர். அன்றியும் சிலச்சேனைகளையும் யுத்தாயுதங்களையும் இழந்துவிட்டனர்.

25உ 18உ கோட்டைகளைத் தகர்த்ததால் துருக்கருக்கு மிகுசேதம் நேரிட்டிருக்கிறதாம், இரண்டு டிஸ்திறோயர்க் கப்பல்கள் சலசந்திக்குள் நேற்று வெகுதூரஞ்சென்றன.

ருசிய செர்மனிய ஆஸ்திரிய கிழ்த்திசை யுத்தம்.

14உ மிம்லேவுக்குவடக்கில் ருசிய குதிரைப்படை ஓர் செர்மனிய படையைத்துரத்திச் சில செர்மனியரையும் சில பீரங்கிகளையுங் கைப்பற்றின.

கொபயோ என்ற ஏரிக்குச்சமீபத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த ருசியபடையால் செர்மனியருக்கு அதிகசேதமுண்டாயிற்று.

பிரசினிசுக்கு எதிரில் செர்மனியர் பல துப்பாக்கிகளையும் குண்டு மருந்தையும் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

15உ நியுமென் விஸ்துலாநிரையில் 30 மைல் தூரம் சண்டைநடந்துகொண்டிருக்கிறது. எங்கெங்கு செர்மனியர் முன்னேற முயலுகிறார்களோ அங்கங்கு துரத்தியடிக்கப்படுகிறார்கள். ருசியர் சனிக்கிழமை எதிர்த்துப்போய் எழு சிற்றூர்களைப் பிடித்தார்கள்.

கார்ப்பேதியன்மலைப்பக்கத்தில் லுப்கவ் என்ற மலைப்பாதையில் ருசியர் 600 ஆஸ்திரியரைச் சிறைபிடித்தனர்.

பிரசேமிசெலுக்குக்குச்சமீபத்தில் ருசியர் திடீரென்றுதாக்கி ஓர் சிற்றூரைப் பிடித்தார்கள். ஓர் ஆஸ்திரியபட்டாளம் பணிந்துவிட்டது.

ஓஸ்சோவியெக்ஸகோட்டைப்பீரங்கிகளால் அனேக செர்மனிய முற்றுக்கைப்பீரங்கிகள் நாசமாக்கப்பட்டன.

17உ போடிபாரிஸ் போலந்து வான்குவஸ் போயில் லீபீத்றர் என்னுமிடங்களில் செர்மனியர்தாக்கியும் பின்னிடைந்தனர்.

ருசியர் கிழக்குப் புருஷியாவிலுள்ள ரேற்தன், லான்சர்க்கன என்னுமிடங்களைத் தாக்குகின்றனர்.

18உ ஓர்கிக் என்னுமிடத்தில் ருசியர் செயமடைகின்றனர். அங்கே செர்மனியருக்குரிய பல துப்பாக்கிகள் ருசியரால் பிடிக்கப்பட்டன.

19உ செர்மனியிலுள்ள ரோரேக்கனில் ருசியருக்கும் செர்மனியருக்கும் யுத்தம்நடந்து ருசியர் பலசேனைகளையும் பீரங்கிகளையும் பிடித்து பலரைச் சிறைப்படுத்தினர்.

ருசியர் புருஷியாவுட் படையெடுத்துச் செல்கின்றனர்.

நீமன்நதியோரத்தில் ருசியர் வியாசு என்னுமிடத்தைப் பிடித்தனர். ருசிய குதிரைப்பட்டாளம் சியன் என்னுமிடத்திற்கு ஓடிச்செல்லும் செர்மனியரைத் துரத்திச்செல்லுகிறது.

19உ மெமல் என்ற பட்டினத்துக்குவடக்காகச் செர்மனியஊருள் ருசியர்படையெடுத்துப்போய்விட்டார். தீயிட்டுக்கொளுத்தும் அக்கூட்டங்களை வெளிப்படுத்தத் தகுந்த நடபடிக்கைகள்நடத்தப்படுமென்று செர்மனிய அறிக்கைகூறுகிறது.

கிழக்குப் புருஷிய எல்லைப்புறத்திலுள்ள டாராகன் என்றஇடத்திலும் கோர்ட்சாஎன்றஇடத்திலுமிருந்து மேமல்என்ற செர்மனிய துறைமுகப்பட்டினத்திற்குமிடையிலுள்ள செர்மனியஊரில் சண்டைநடக்கிறது. அங்கு இரண்டு பெரியபீரங்கிகளையும் நாலு சிறுபீரங்கிகளையும் குண்டுகள் ஏற்றப்பட்டிருந்த இரண்டு மோட்டார்வண்டிகளையும் ருசியர் பிடித்துக்கொண்டனர்.

20உ நியூமனுக்கு வடபக்கத்தில் ருசியர் வெய்குவைப்பிடித்தனர். செர்மனியர் செயனுக்குப் பின்னிடக் காலாட்படை அவர்களைத் தொடர்ந்துசெல்கின்றது.

21உ தரகோனில் சண்டைசெய்தபிற்பாடு சத்துருக்கள் எல்லைக்கப்பால் துரத்தப்பட்டார்கள். வியாழக்கிழமை எட்டுமணிக்கு ருசியபட்டாளம் முன்னேறிப்போய் மேமலைச்சேர்ந்து சண்டைசெய்து அவ்விடத்தைப் பிடித்தது.

பிரிசிமிலுள்ள காவற்படை ஒன்பது மணித்தியாலம் சண்டைசெய்து தோற்கடிக்கப்பட்டனர் செர்மனியரில் 3000 பேர் மறியற்காரரானர்கள்.

22உ மெமலிலிருந்து கார்ப்போதியன்வரையில் நடந்தசண்டை ருசியருக்கு அனுகூலமாயிருக்கிறது.

சிமில்னிக் என்றஇடத்தில் குண்டுமாரிபொழிந்து இரண்டு பீரங்கிகளையும் 2546 பேரையும் ருசியர் கைப்பற்றினர்.

ரீஸ்மில் காவற்படை கோட்டைக்குள் துரத்தப்பட்டது.

23உ ருசியரின் முற்றுக்கையை நாலரை மாசம் பொறுத்திருந்தபின ரீஸமில் கௌரவத்துடன் பணிந்துவிட்டதென்றும் பங்குனிமாசமத்தியில் ஆகாரங்கள் தட்டுப்படுவதைக்கண்ட ஜெனறல் வான்குஸ்மானேக் என்ற தளகர்த்தர் வெளிகிளம்பிக் கோட்டையைத் தாககலாமென்று நினைத்துக் கோட்டை வட்டத்தைவிட்டு 19உ காலையில் வெளியேபோய் பலமான ருசியரின் தாக்குதலைஎதிர்த்து 7 மணிநேரம் சண்டைசெய்தும் ருசியர் தொகையில் அதிகரித்திருந்தமையால் ஆஸ்திரியர் கோட்டைக்குத் திரும்பிவிட வேண்டியதாயிற்றென்றும், மறுநாள்இரவு ருசியர் பலதிக்குகளிலுமிருந்து கோட்டையைத் தகர்த்தனரென்றும், கோட்டையின் காவற்படைகளான தீரர் ருசியபீரங்கிகளை நொறுக்கி விட்டார்களென்றும், பின்பு மூன்றுநாளைக்குத்தான் ஆகாரமிருந்ததென்றும், மூன்றுநாளின்பின் பணிந்துவிடும்படி தளகர்த்தருக்கு உத்தரவுசெய்யப்பட்டிருந்த[illegible]தனதும், பணிவதற்குமுன யுத்தபடைகளை[illegible]யும் கோட்டைகளையும் பீரங்கிகளையும் குண்டு[illegible]களையும் தளகர்த்தர் அழித்துவிட்டார்களென்றும் [illegible] கோட்டையிலிருந்துவந்த ஆகாயவிமானமூலமாய்த் தெரிகிறதென்று ஆஸ்திரிய அறிக்கை கூறுகிறது.

ஆறுமாசத்தின்பின் கோட்டைபணிந்தது முக்கியவெற்றியாகக் கருதப்படுகிறது. அக்கோட்டையின் காவற்படையாக 25 ஆயிரம்பேரிருந்திருப்பார்களென்று [illegible] நினைக்கப்படுகிறது. சிறைபிடிக்கப்பட்ட ஆஸ்திரியர் சொல்லுகிறபடி கோட்டைக் காவல்படை[illegible] உணவால் கட்டுக்கெட்டுக் கொண்டிருந்ததென்றும், ரொட்டியில்லையென்றும் ராணுவஉத்தியோகஸ்தரின் குதிரைகளைத்தவிரவேறு மாமிசத்துக்கு வழியில்லையென்றும், சிலசமயங்களின் [illegible]வெட்டையாடியும் தகரடப்பிகளில் அடைக்கப்பட்ட ஆகாரங்களையும் உண்டுசீவித்துவந்தார்களென்றும் அவைகளும் ஆகாயவிமானங்களால் [illegible]கொண்டுபோகப் பட்டனவென்றும், கொ[illegible]புக்காய்ச்சலாலும் வேறுநோய்களாலும் காவல் சேனைகள் வருந்தியிருந்தார்களென்றும், சேனைகள் இத்தொல்லையால் திருத்தியீனப்பட்டிருந்தார்களென்றும், கோட்டைகளிலிருந்து வெளிப்பட்டு ருசியரைத்தாக்கியது குண்டுச்சேதத்தை[illegible]ணடுபண்ணினதென்றும், ஓர் முடிவுக்குவந்துவிட்டதற்கே அப்படி உத்தியோகஸ்தர் நினைத்தனரென்றும் தெரிகிறது.

ரீஸ்மில்கோட்டையைப் பிடித்ததற்காக ருசியசேனைக்கும் கோட்டையை முற்றுக்கைசெய்திருந்தபடைத்தலைவர்களுக்கும்ருசியசக்கிரவர்த்தி விருதுகள் அளித்தனர். ரீஸ்மில் பணிந்ததினால் ருசியாவில் கொண்டாட்டம் நடக்கிறது.

பெரிய ருசியசேனையொன்று கிறோக்கோகரை நோக்கிச்செலலக் காத்துக்கொண்டிருக்கிறது.

புருத்என்றநதியின் மேற்குக்கரையில் இப்போது ருசியர் யுத்தஞ்செய்கின்றனர். செர்னோவிஸ் அதன் கரையிலிருக்கிறது, அப்பட்டினம் பிடிக்கப்படக்கூடும்.

23உ கார்ப்பேதியன் பிரதேசத்தில் ஹார்ட்பெல்ட் என்றஇடத்திற்குப் போகும்சாலையில் உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருக்கிறது. கைகலந்து சட்டிச்சண்டைசெய்தும் துப்பாக்கிப்பிரயோகஞ்செய்தும் ருசியர் சத்துருக்களைப்பின்தள்ளி முன் செல்லுகின்றனர். திங்கட்கிழமை 2500 சேனைகளைச் சிறைபிடித்தனர்.

கிழக்குப்பிரஷியாவில் வடக்குக்கரையில் புகுந்தருசியசேனை முன்சென்று கொண்டிருக்கிறது. பால்திக் கடற்கரையிலுள்ள மெமல்என்றபட்டினத்தினுள் ருசியர் புகுந்துவிட்டனர். வடபோலந்தில் சண்டை யாதொருமுடிவுக்கும் வரவில்லை. புகோவினாவில் ஆஸ்திரியர் மறுபடி வலுவாய்த்தாக்கியும் செயம்பெறவில்லை.

கிழக்குப்பிரஷியாவில் மெமல்என்ற நகரை நோக்கி வேவுபார்க்கச்சென்ற ருசியசேனைகள் எல்லைக்குத் திரும்பிவிட்டனவென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

கார்ப்பேதியனில் புவாலா கணவாய்முதல் அபர்சான்வரையில் ருசியர் முன்சென்று 3500 ஆஸ்திரியரைக் கைதியாக்கினர்.

செர்மனியருக்குத் துணைப்படைவந்துசேர்ந்ததினால் நர்ருநதியின் மேற்குக்கரையிலும் ஓர்சிட்சநதியின் மேற்குக்கரையிலும் பொல்லாத முரட்டுச்சண்டை நடந்தது. ஆயினும் ருசியர் மெதுவாய் முன்செல்லுகிறார்கள்.

கார்ப்பேதியனிலும் ருசியர் முன்னேறிக் கட்டுக்காவல்செய்திருந்த சிலகுன்றுகளைப்புதன்கிழமை பிடித்துக்கொண்டார்கள். 4000 ஆஸ்திரியரையும் பல சிறுபீரங்கிகளையும் ருசியர் கைப்பற்றினர்.

25உ வடபோலந்தில் உக்கிரமான சண்டை நடக்கிறது. தாமிழந்த பூமியைமீட்கச் சராலோவில் செர்மனியர் ருசியரை எழுமுறைதாக்கியும் பயனடையவில்லை. இரண்டு செர்மன்பட்டாளம் நாசமாக்கப்பட்டு வேறொன்று தோற்கடிக்கப்பட்டது.

கலிஷியாவில் பனியுறைந்த ஓர் மலைச்சிகரத்திலிருந்த சத்துருக்களை ருசியகாலாட்படை ஈட்டியாற்றாக்கிற்று.

ருசியருக்குரிய கோலாண்டு கடற்கரையோரமாக ருசியச்சேனைகள் தங்கியிருக்கும் இடங்கள்மேல் 7 செர்மன் கப்பல்களும் 28 டிஸ்திறோயர்க்கப்பல்களும் நாள்முழுதும் சுட்டுக்கொண்டேயிருந்தன.

கங்கேரியில் ஸ்டாரோஸ்டிரு என்றஇடத்தில் மூன்றுநாளாய்ச் சண்டைநடக்கிறது. ருசியரே செயமடைகின்றனர். இதனால் ஆஸ்திரியருக்கு அதிநட்டம்.

லுப்கோப்பில் ஒரு மலைச்சிகரத்தில் ஆஸ்திரியர் வசமிருந்த ஓரிடத்தை ருசியர்பிடித்து முக்கியமான இடத்துக்கு 700 யார்தூரத்தில் பீரங்கிகளைக்கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டனர். பின்பு அவ்விடத்தைப் பீரங்கிகளால் தகர்த்தனர். ஆஸ்திரியர் பிடிவாதமாய்த்தடுத்தும் பின்வாங்குகின்றனர். 5700 ஆஸ்திரியரையும் பல சிறுபீரங்கிகளையும் ருசியர் கைப்பற்றினர்.

குண்டுமுதலிய சாமான் குறைந்தாற்றான் ருசியரைச் செயிக்கமுடியுமென்று ஓர் செர்மனியபத்திரிகை கூறுகிறதாம்.

கடற்சங்கதி.

15உ "கெட்லண்ட்லெ" "ப்ளோரசான்" ஹாட்டேல் என்றபிரித்தானிய வியாபாரக் கப்பல்கள் செர்மனிய மூழ்குகப்பல்களால் ஆழ்த்தப்பட்டதென்பதை அரசாட்சி றிப்போட்டு உறுதிப்படுத்துகிறது.

"டிரேஸ்டென்" என்னும் செர்மனியபோர்க்கப்பல் "க்ளாஸ்கோ" "மகன்ந்" என்றபோர்க்கப்பல்களாலும், போர்க்கப்பலாக மாற்றப்பட்ட "ஓராமா" என்றகப்பலாலும் தாக்கப்பட்டு 5 நிமிஷச் சண்டையின்பின் வெள்ளைக் கொடியைக் காட்டித் தன்னைஒப்புக்கொடுக்க எத்தனித்தது. அதற்குள் அதுபழுதாய் மருந்தறை வெடித்துச் சேதப்பட்டுக் கடலில் ஆழ்ந்துவிட்டது. அதிலிருந்தவர்கள் இரட்சிக்கப்பட்டு வல்பாரேய்சோ துறைமுகத்தில் இறக்கப்பட்டார்கள். 15 பேர் காயப்பட்டனர். பிரித்தானியர் பக்கத்தில் சேதமில்லை. ஆழ்ந்தகப்பல் "எம்டன்" கப்பல்போலச் செய்யப்பட்டது. 3544 டன்நிறையுள்ளது.

"அத்லாண்டு" என்னும் அங்கிலேயகப்பல் இனிஷாக் தீவுக்குச்சமீபமாக செர்மனியரால்சேதப்படுத்தப்பட்டது. பின்கால்என்னும் பிரித்தானியகப்பல் தமபான்டு என்னுமிடத்துக்குச் சமீபத்தில் செர்மனியரால் கடலில் அமிழ்த்தப்பட்டது. 21 பேர் மீட்கப்பட்டனர்.

18உ U. 28 என்னும் செர்மனியகப்பல் பிரித்தானியரின் வீயூவார்டன் என்னுங்கப்பலை கீழாழ்த்தித்து. அதிலிருந்தோர் மீட்கப்பட்டனர்.

"கினுர்த்தினி" என்னும் பிரித்தானிய கப்பல் பாக்கோக்கிலிருந்து அரிசியேற்றி லண்டனுக்கு வரும்வழியில் இங்கிலீஷ்கால்வாயில் செர்மனியகப்பலால் கீழாழ்த்தப்பட்டது. அதிலிருந்தோர் வேறோர் கப்பலால் மீட்கப்பட்டு நியூகவின் என்னுமிடத்தில் இறக்கப்பட்டனர். ஒருவன் மாத்திரம் சேதம்.

கான்ஸ்குற என்னும் செர்மனியகப்பல் உடைந்துபோய் விட்டதென்றும் அதை செர்மனியர் மறைக்கிறார்களென்றும் கதைபரவுகிறது.

20உ செர்மனிய சப்மரையின் கயனோர் என்ற பிரித்தானியகப்பலை ஞாயிற்றுக்கிழமை விச்செற் என்றஇடத்திற்கப்பால் தாழ்த்துவிட்டது. 34 மாலுமிகள் இரட்சிக்கப்பட்டனர்.

23உ கான்கார்ட் என்றகப்பல்மேல் ராயல்சாவரின் என்னுமிடத்திற்கருகே ஒரு சப்மரையின் டொர்பிடோ வெடியைப் பிரயோகித்தது. அதிலிருந்த 26 மாலுமிகள் டோவர் துறைமுகத்துக்குப் போய்ச்சேர்ந்தனர்.

பிரைசெல்என்னும் தென்மார்க்கு தேசக்கப்பல் சமீபத்தில் செர்மனியரால் பிடிபட்டது. அதைஇப்போது விட்டுவிட்டார்கள். அதிலிருந்த எண்ணெயைச் செர்மனியர் எடுத்துக்கொண்டார்கள். அவ்வெண்ணெய் சுவீடனுக்குப் போகவேண்டியது.

அமரிக்காவின் சஞ்சுவான்நகரில் அடைபட்டிருந்த ஒடன்வால்ட் என்னும் செர்மனியகப்பல்அவ்விடத்தைவிட்டுச் செல்லமுயன்றபோது அங்குள்ளகோட்டைகள் போலிக்குண்டைச் சுட்டும் நிற்காமல் செல்லஎத்தனித்ததினால் உண்மையான குண்டுசுடப்படவே கப்பல் திரும்பிவிட்டது. உடனே துறைமுகஅதிகாரிகள் அதைப்பிடித்துவிட்டனர். அக்கப்பல் புறப்படமுன் ஆகாரங்களை ஏற்றிக்கொள்ளவே துறைமுக அதிகாரிகள் அதைப்போய்ப்பார்த்தனர். அவரை இறங்கிப்போகும்படிசொல்ல அவர்மறுத்ததினால் அவரை ஒருபடகில் இறக்கிவிட்டார்கள். பிரவுன் பிரின்ஸஎன்னும் யுத்தக்கப்பல் சமீபத்திருந்ததினால் அதற்கு ஆகாரங்கொண்டுபோய்க்கொடுக்கவே இது முயற்சித்ததுபோலும்.

25உ U. 29 என்ற செர்மனியசப்மரையின் மூழ்கிப்போயிருக்கவேண்டுமென நம்பப்படுகிறது. சிலமாசங்களின்முன் மூன்றுபிரித்தானிய குரூசர் யுத்தக்கப்பல்களை ஒரேகாலத்தில் மூழ்கடித்த லெப்தினன்ற் வெட்டிஞ்சன் அதின்தலைவராயிருந்தார்.

இங்கிலந்தின் தென்கரையில் பீச்சிகெற்என்ற இடத்திற்கப்பால் மீடியாஎன்ற ஒல்லாந்துக்கப்பலை செர்மனிய சப்மரையின் மூழ்கடித்துவிட்டது. அதிலிருந்தமாலுமிகள் காக்கப்பட்டனர்.

டிரேஸ்டன்கப்பல் மாலுமிகளைக்குடியரசாகிய சில்லிக்குக்கொண்டுபோய் அங்கு யுத்தமறியற்காரராய் வைக்கப்படுவார்கள். அதற்காக இருயுத்தக்கப்பலை சில்லியனுப்பிற்று.

இத்தாலி.

22உ இத்தாலியிலிருந்துவந்தசெய்தியில் இத்தாலியிலுள்ள செர்மனியரும் ஆஸ்திரியரும் சீக்கிரத்தில் அங்கிருந்து புறப்பட்டுவிடவேண்டுமென்று அங்குள்ள இத்தாலிய ஆஸ்திரிய ஸதானபதிகள் தெரிவிக்கிறார்களாம். பொய்க்காரணங்களைசொல்லி அனேக செர்மனியர் இத்தாலிக்குள் செல்லுகிறார்களாம். அவர் வேவாளரென்று பொலிசர் சந்தேகிக்கிறார்களாம். வேவாளரை அடக்கும்படி இத்தாலியில் ஒருசட்டம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

அமரிக்கா.

அமரிக்க ஐக்கியதேச உத்தியோகஸ்தர் கனடாச் சேனைகளுடன்சென்று பிரான்சில் யுத்தஞ்செய்வது உண்மைதானாவென்று அத்தேச அதிகாரிகள் விசாரணைசெய்கிறார்கள்.

ஒல்லாந்தின் ஆட்சேபம்.

செர்மனியிலிருந்து எக்கப்பலாவது வரமலும் அங்கு செல்லாமலும் தடுப்பதற்காகப் பிரான்சிய அங்கிலோ அரசாட்சியார் செய்யும் முயற்சிகளை ஒல்லாந்து அரசாட்சியார் ஆட்சேபித்து ஓரறிக்கையனுப்பினர்.

சிங்கப்பூர்க்கலகம்.

அங்குள்ளகலகம் முற்றுயடக்கப்பட்டது. கலகக்காரரில் 11 பேரைத்தவிர மிகுதியானோர்யாவரும் பிடிபட்டனர். 5 கலகக்காரர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மற்றையோர் சிறைத்தண்டனையடைந்தனர். கலககாலத்தில் செர்மனிய கைதிகளில் 17 பேர் தப்பியோடினர். அவர்களில் 5 பேர் திரும்பப்பிடிக்கப்பட்டனர். மற்றக் கைதிகளின்நடத்தை திருத்தியாயிருக்கிறது.

தென்னாபிரிக்கா.

20உ தென்மேற்காபிரிக்காவிலே செர்மனியருக்குச் சொந்தமானநாட்டில் செர்மனியருக்குச் சாமான்கொண்டுபோன ஓர்புகைவண்டியை ஜெனறல் போதா தடுத்துவிட்டார்.

21உ சுவாக்தோபாண்டிலிருந்துவந்த றூற்றர் செய்தியால் ஜெனறல்போதாசண்டைசெய்து நூற்றுக்கணக்கான செர்மனியரையும் நாலுபீரங்கிகளையுங் கைப்பற்றினரென்றுதெரிகிறது.

ஸவாகோப்மண்டில் செர்மனியருக்குச் சலமுதவுமிடத்தையும் வசப்படுத்தியிருக்கிறார்.

செர்மனியரிடம் 6 இஞ்சுப்பீரங்கிகளையுடைய இரண்டு பீரங்கிப்படையுட்பட 120 பீரங்கிகளும் 10000 தேர்ந்தபோர்வீரருமிருந்தனர். தென்

அமரிக்காவிலிருந்து 15000 சேமக் கருப்புகள் அழைக்க எண்ணமாயிருந்தது. அங்குள்ள கலகக்காரருதவியுடன் தென்னுபிரிக்காவைப்பிடிக்க எண்ணியிருந்தனர். அங்கு கலகமும் அடங்கி ஜெர்மனியரின் துறைமுகங்களும் பிடிக்கப்பட்டு அங்கு கப்பல்செல்வதும் தடைப்பட்டதினுல் ஜெர்மன்காரர்களுக்கு ஆபத்துண்டாயிருக்கிறது. ஆடுமாடுகள் அங்கிருந்தபோதிலும் பிறதேசத்திருந்துதான் மாவரவேண்டும். ஆயினும் விசாலமான அவர்கள்நாட்டையடக்க நீண்டகாலஞ்செல்லும்.

யுத்தந்தையடுத்த செய்திகள்

14வ. நிறைபிடிக்கப்பட்டுச் சேர்வியாவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆஸ்திரியர்மூலமாய் சேர்வியாவில் தொற்றுநோய்கள் பரம்பிவிட்டன. அதற்காக அனேக பிரான்சு டக்றர்கள் அங்குசெல்லப் புறப்பட்டிருக்கிறார்கள். வியாதிக்காரரைப் பராமரித்த படைக்றார்களும் தாதிகளும் அவ்வியாதியால் பீடிக்கப்பட்டு மாண்டனர்.

கிரேக்கிலும் பல்கேரியாவிலும் அவ்வியாதிபரம்பாமல் அவ்வரசாட்சிகள் கட்டுக்காவல் செய்கிறார்கள்.

அரசைஇழந்ததுருக்கி சுல்தான் அப்துலஹமீதுடைய குமாரரிலொருவர் தொண்டைநெரிக்கப்பட்டுக் கொன்ஸ்தாந்திநோப்பிள் தெருவொன்றில் இறந்துகிடந்தார்.

பீர்ச்சராய்ப் பீப்பாக்களில் ஒளித்துவைத்துத் திரிப்போலிக்குத் துப்பாக்கிகள் ஜெர்மனியர் அனுப்பிவந்ததாய் இப்போது தெரிந்ததினுல் இத்தாலியருக்கு மிகுகோபமுண்டாயிருக்கிறது.

இத்தாலிய எல்லைப்புறத்தில் யுத்தாயத்தம். அதிரியாற்றிக் கடற்கரையிலிருக்கும் டிரீட்ஸ் என்ற ஆஸ்திரியதுறைமுகத்தில் ராணுவ கடபடி மும்முரமாய் நடைபெறுகிறது. நன்குப் பயிற்சிபெற்ற ஜெர்மனியருட்படப் பதினுயிரக்கணக்கானுேர் பீரங்கிகளுடன் ஒன்றுசேருகிறார்கள். 52 வயசுள்ளவர்களும் பயிற்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சித்திரைமாதம் போர்முனைக்கு அனுப்பப்படுவார்கள்.

சென்ற ஆறுமாசத்தில் இத்தாலியகடற்படைக்கு 20 சப்மரையின்கள் சேர்ந்திருக்கின்றன. 220 ஆகாயவிமானிகள் புதிதாய்ப் பயிற்சிபெற்றிருக்கின்றனர். இத்தாலியசேனையில் 300 ஆகாயவிமானங்களும் 20 இகாயக்கப்பல்களுமிருக்கின்றன.

டால்மேஷியாவென்னும் ஆஸ்திரியமாகாணத்துக்கும் இத்தாலிக்கும் நடந்துவந்தவியாபாரந்தடைப்பட்டது.

கனடாவிலிருந்துவந்த காலாட்படையின் தலைவரான கர்னல் பார்குவார் மாண்டுபோனுர்.

அமரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு அதிகமான கோதுமை ஏற்றினுல் அமரிக்கவாசிகளின் உணவுக்குக் காணுமற்போமென்றும் ஆதலால் அங்கிருந்து அதிகமாய் ஏற்றப்படமாட்டாதென்றும் இந்தியாவிலிருந்து கோதுமை அழைப்பிக்க அங்கிலோ அரசாட்சியார் தீர்மானித்திருக்கின்றனர்.

யப்பானிலுள்ள ஒரு ஜெர்மனிய கம்பனியாருக்குச் சொந்தமாய்ப் பார்லகரிலிருந்த 50 டன் நிறையுள்ள 2042 செம்புக்கட்டிகள்பறிமுதல்செய்யப்பட்டன.

பிரான்சுச்சேனைக்குச் சம்பளங்கொடுக்கும் உத்தியோகஸ்தர் சேனையின் சாமான்களைக்கையாடினதினுல் அவர் ஏழுவருடச் சிறைத்தீர்ப்படைந்தார். அவரது கவுரவப்பட்டமும் அழிக்கப்பட்டது. அவர்க்குதவியாயிருந்த வைப்பாட்டிக்கு இரண்டுவருடச் சிறைத்தீர்ப்பும் ஒரு போர்வீரனுக்கு ஒருவருடச் சிறைத்தீர்ப்பும் விதிக்கப்பட்டன.

MAGIC OF THE 20th CENTURY
Very Amusing,Charming & Attractiv.
அழகியபாம்பு சித்திரக்கட்டி.



இது மிகுஆச்சரியத்தையுஞ் சந்தோஷத்தையுங்கொடுக்கும். இதில் சிறிதெடுத்து நெருப்பிலிட்டால் அது ஒருபெரியபாம்பாகக்காணப்படும். விலை ஒரு பெட்டி ரூபா 8.

நிறங்கொக்கும் வெண்ணை—இதை முகத்தில்தடவிவந்தால் முகத்திலுண்டாகும் பருக்களையும் கறுப்புப்புள்ளிகளையும்மாற்றி முகத்திற்கு அழகைக்கொடுத்து ரோமமும் அடர்த்தியாக வளரும். ஒருமாசம் வரக்கூடிய புட்டி ஒன்றுக்கு விலை அணு 8.

மாற்றும்படங்கள்—தண்ணீரின் உதவியால் வீடுமுதலியவைகளை அலங்கரிக்கப் புஷ்ப செடிமாற்றச்சம்பந்தமானவை. அழகுள்ள பலவிதபடங்கள் முதலியவைகளை எதிலும் மாற்றிக்கொள்ளலாம். 4 பிரிவுள்ள ஒரு ஷீட்டின் விலை 2 அணு ஒருடசன் ஷீட்டு ரூபா 1 அணு 8.

போட்டோ மோதிரம்

இது மேற்காட்டிய மோதிரத்தைப்போலவே. அதனுல் மத்தியில் அழகியபெண் கடவுள் அல்லது சேவகை இவர்களின் படம் பெரிதாகக்காணப்படும். விலை8. அணு. டஜன் 1—க்கு ரூபா 6.

எட்டுலோகங்களாற்செய்த மோதிரம்—வெள்ளை தத்தாரம் செம்புமுதலிய எட்டுலோகத்தால் செய்யப்பட்டது. இதை வலதுகைவிரலில் போட்டுக்கொண்டால் சகலவியாதிகளைப் போக்குவதுடன் இரத்தத்தையுஞ் சுத்திபடுத்தி மனதுக்கு உற்சாகத்தைக்கொடுக்கும். விலை அணு 8 டஜன் ஒன்றுக்கு ரூபா 6.

இனும்—மேலேகாட்டிய மோதிரங்களில் ஒரே தடவையில் ஒரு—டஜன்வாங்குவோருக்கு ரூபா 6 விலையுள்ள ஒரு நெயில்வே ரெகுலேட்டர் வாச் இரண்டுவருஷ வியாரண்டி பத்திரத்துடன் கொடுக்கப்படும். கடிதம் இங்கிலிஷில் எழுதப்படவேண்டும்.

In ordering please write in English
Apply to:-New City Agency
No. 8 S.1. Raj Chunder Sens Lane
on Road' Calcutat, Harris

பி சுப்பராயின் அபூர்வஆயுர்வேத அவுஷதங்கள்.

1. தாதுப்புஷ்டிமருந்து—அதன்குண[illegible]லை எழுதமுடியாது. அனுபோகத்தல் தெரிந்[illegible]கொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்[illegible]தன்மைகெடல், பசியின்மை. கண்கால் எரிவு, [illegible] சீக்கிரஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், [illegible] கைகால் இடுப்புமுதலிய அவயவங்களில் சோர்[illegible], வலி சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, [illegible]மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், [illegible]சதையடைப்பு இன்னும் பற்பல மூத்திர ரோ[illegible]களைப்போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, தாதுவிருத்தியையுண்டாக்கும். [illegible]தாதைக்கெட்டிப்படுத்தும். டப்பா 1-க்கு விலை [illegible]ரூபா 2. வி பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

2 அக்கினிமாந்தத்திற்குமருந்து—பசி[illegible]யின்மை புளித்தஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சி[illegible]க்கல், வயிற்றுவலிவாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்தஉபத்திரவங்களைச் சொஸ்தப்படுத்தும். பசிதீபனமும்தேக ஆரோக்கியமும்தரும். டப்பா 1—க்கு அணு 8. வி. பி, செலவு 1 அல்லது 2 டப்பாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்,

3 பிரமேகநிவாரணி—எந்தக்காரணத்தினுல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை நீர்வத்தல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம்வருதல்முதலிய வியாதிகளை ஆண்பெண் இருதாத்தாருக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1—க்கு விலை ரூபா 1. வி.பி. செலவு 1முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம.

4 லக்ஷுமீகரகஸ்தூரிமாத்திரைகள்—தாம்பூலந்தரிப்பவர்கள்கையிருப்பில் எப்பொழுதும்வைத்துக்கொள்ளவேண்டியவிலையுயர்ந்தவஸ்து. தந்தநோய் வாய்நாற்றம், அஜீரணம். பித்தவாய்வு இவைகளை நீக்கும், தாம்பூலத்துடனுவது தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனேஜீரணஞ்செய்வதுடன் வாயில் அனேகமணிநேரம் சுகந்தவாசனையிருக்கும் பிரதிதினம்காலையில் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்தஅக்கினிமந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினுலுண்டாகும் வயிற்றுழிவு, விஷநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் நீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன்,உபயோகித்துவந்தால் சன்னிகிட்டாது. சன்னியில் கொடுக்கச் சன்னிதீரும். இதில் லாகிரி தலானயாதொருஅபாயகரமான வஸ்துசேரவில்லை. காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும் வாசனைத்திரவியங்களுஞ்சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கற்பூரம்முதலாகிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அநுவசியம், அறைவீத் குழந்தைகள்முதல் [illegible] யாவரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்குந்தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள்வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச்சுகமாகும். சீசா 1—க்குவிலை அணு இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள்வரையில் அனுப்பபாக்கிங்குதபால்சார்ஜ் அணு5ம் சிலோனுக்கு அணு 7ம் பிரத்தியேகம்.

5 சர்வரோகசம்ஹாரன்—இத்தைலத்தைத் தேய்த்தால் கைகால் சந்துக்களின் பிடிப்பு சம்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், [illegible]வலி, பாரிசவாயு, மேகவாயுமுதலான இன்னும் தேகத்திலுண்டாகும் எல்லாநோய்களையும் சீக்கிரத்தில்குணப்படுத்தும். சீசா ஒன்றுக்குவிலை ரூபா 1 வி பி செலவு ஒன்றுமுதல் 3 சீசாக்கள்வரையிலனுப்ப அணு5 பிரத்தியேகம்.

6 சுகந்தகூந்தல்தைலம்—இத்தைலத்தால் தலைமயிர் மீசை கண்இமை கெருமைஉள்ளதாகவும் நெருக்கமாகவும் கறுப்பாகவும்வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண்ணுேய்களும் தலைநோய்களும்நீக்கும். செம்பட்டைமயிர் கறுக்கும். மயிர் உதிராமல் காக்கும், கண்களுக்குப் பிரகாசத்தைத்தரும். விலை புட்டி 1க்கு அணு 8 வி பி செலவு ஒன்று இரண்டு சீசாக்கள்வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

7 நேத்திரபிந்து—கண்ணேய் கண்குற்றல் கூசல் நீர்வடிதல் மங்கல் அந்திமாலை [illegible]க்கட்டல் மாமிசம்வளர்ந்திருத்தல் பூவிழுந்திருத்தல் கண்சிவப்பு எரிச்சல் கண்இமைஉருவம் இமைகளின் வலி கண்புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் [illegible] பொடவேண்டியது அவசியம் [illegible] விலை அணு 8 வி பி செலவு 1முதல் 6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்,

8 கர்ணபிந்து— காதில் சீழ்வடிதல் வலி குத்தல் குடைச்சல் காதடைப்பு இரைச்சல் செவிடு இவைகளைக் குணமாக்கும், செவிடருக்கும் கேட்கும். சீசா 1 விலை அணு எட்டு வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்,

9 சர்வபடைசம்காரனை—இடுப்பு [illegible] ஒடுக்கு முதலியஇடங்களில் உண்டாகிற [illegible] வெகுநாளில் [illegible]களில் படரும் சொசப்படை [illegible] டிப்புப்படை தேமல்முதலியவைகளை [illegible] குணப்படுத்தும். சீசா 1க்கு விலை அணு [illegible] வி பி செலவு ஒன்றுமுதல பன்னிரண்டு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

10 பேதிமாத்திரைகள்—வயிற்றில் வலி [illegible] யாதுமில்லாமல் சுகமாய்ப்பேதியாகும். அஜீரணம் பித்தஉபத்திரவங்கள் சகலவாயு மலச்சிக்கல் அக்கினிமாந்தம் வாதம் கைகால்முதலிய அவயவங்களின் குடைச்சல் வலி [illegible] முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும். [illegible] 12க்கு அணு எட்டு. வி பி செலவு 1 முதல் 5 சீசாக்கள்வரையில் அணு5 பிரத்தியேகம்

11. ஜ்வரசம்ஹாரி—நீராதாரப்பட்ட லசுரங்கள், குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம் காமாலை,பிடரிவலி,இடுப்புவலி, விலாவலி,முழங்கால்வலி, உடம்புவெருப்பு, மயக்கம், தாகம் இரண்டாமுறைச்சுரம், நாலாமுறைச்சுரம்முதலிய சகல சுரங்களை அடியோடுபோக்கும். டப்பா 1-க்கு வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

12. உரோமசம்ஹாரி—இச்சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினுல் வெகு எளிதில் மயிர்நீக்கிவிடும்.சீசா1-க்குஅணு4. 1முதல்6சீசாக்கள்வரையில் வி. பி. செலவுஅணு5 பிரத்தியேகம்

13. சுகந்தபல்பொடி—கல்லஜீரணசக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வராது.பல் எக்காலத்திலும்விழாது. சீசா 1—க்கு விலை அணு3 வி.பி செலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்,

14. ஸ்கலிதரக்ஷணி—பலவீனத்தாலும்,உஷ்ணத்தினுலும், சிற்றின்பத்தில் பாலியத்தில்நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும் சொப்பனத்திலும் இந்திரிய நட்டமாகிறதை நிற்பாட்டித் தேகதிடத்தைத்தரும். சீசா 1—க்கு அணு 8. வி.பி, செலவு 1 முதல்6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்தகஸ்தூரி—மிகவும்சேர்த்தியானதும்முதல்தரமானதும் காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்போதுங் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48 ஒரூபாய்க்குக்குறையால் சில்லறையிலும்விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கொட்டின்மருந்து—இம்மருந்தை விஷந்தீண்டிய இடத்தில் தடவினுல் தக்ஷணமே விஷமிறங்கி வருத்தப்பட்டுச் சகிக்கமுடியாதவேதனையில்லின்றுங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்ஆனந்திக்கும்படியான அநுகூலத்தைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள்வரையிலும் வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்,

முக்கியகுறிப்பு—ஒரேதடவையில் 12 சீசாவுக்குக்குறையாமல்தேள்கொட்டின்மருந்தில் வாங்கினுல் டஜன் 1-க்குரூபா 2-8-0 வீதங் கொடுக்கப்படும். வி.பி. செலவு அணு 5 பிரத்தியேகம். இக்குறிப்புதேள்மருந்தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17, மேகாரணமருந்து—இதைவெள்ளைத்துணியில்தடவிரணங்களின்மேல்போட அரையாப்பு கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆனைப்பவுத்திரம், அரூகுளியன், பிளவை, கிரந்தி, மேகவெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று, முதலிய இரணங்கள் ஆறிச்சொஸ்தமாகும். விலை சீசா 1—க்கு அணு 8. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள்வரை வி, பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

18. கண்டசுத்திமாத்திரைகள்—டைரக்ஷனில் சொல்லியபடி இதைச்சாப்பிட்டுவந்தால் தொண்டைக்கட்டு,தொண்டைகம்மலை நீக்குவதன்றி [illegible] சங்கீதவித்வான்களுக்கும் பிரசங்கஞ்செய்பவருக்கும் உபாத்தியாயர்களுக்கும்இது ஓர் அமையானஔஷதம், எத்தனைநேரம்பாடினுலும் பிரசங்கித்தாலும் குரல் கம்மாது.இனிமையான ஓசையைத்தரும். விலைசீசா 1—க்கு அணு 8,இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால்முதலியசெலவு அணு 5 பிரத்தியேகம்.

19. சுகந்தஸ்நானப்பொடி— இந்த வாசனைப்பொடியைத் தினந்தோறும் தேகத்தில்தேய்த்து ஸ்நானஞ்செய்துவந்தால் தேகத்திற்குச் சுகந்த பரிமளத்தைத்தந்து தேமல், அரிப்பு, சொறி, சிரங்கு. கற்றாழைநாற்றம், கைகால் எரிச்சல், பேசுகாங்கை, சரீரவறட்சி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை, மேகஊறல், கிரந்திமுதலிய இன்னும் அனேகவிததோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமுமுண்டாம். அறைவீட்டுக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணு 8, வி. பி. செலவுஅணு 3 பிரத்தியேகம்.

20 சஞ்சீவிமாத்திரைகள்—இம்மாத்திரைகளினுல் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி. விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கலை முதலியநோய்கள்தீரும். அரைக்குழந்தைமுதல் யாவரும்உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணு10 இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணு5 பிரத்தியேகம்.

21. மஹாரோகரோகஹரமாத்திரை—இம்மாத்திரையினுல் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலியக்கம், தெற்குத்திக்கலைசன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்குமாந்தம் அஜீரணம், செலவாப்பு, கடுவான், கரப்பன் பால்மாந்தம்முதலியஎல்லாமாந்தங்களும், சருக்கி [illegible] மலைசலக்கட்டு முதலியதுகளும், [illegible], முறைசுரம்முதலான பலவித சுரங்களும்அடியோடுநீக்கும். சீசா 1-க்கு விலைஅணு 10. 1 முதல் 6 சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணு [illegible] பிரத்தியேகம்.

22, காப்பானுக்கும்சொறிசிரங்குக்கும்மருந்து—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி உடம்புக்குட்டிஉபயோகித்துவந்தால் [illegible] எவ்வித [illegible]களும், சொறி, சிரங்கு,வரட்சொறி, அனேக குழந்தைகளுக்கு தேகமெங்கும்அல்லது சில பாகங்களில் உண்டாகிற [illegible] சொக்கராவையும்தருகின்ற அவ்விதகரப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும் விலை சீசா 1 அணு8இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி.பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள்வரையில் அணு5 பிரத்தியேகம்.

23. தேசசௌவாசனி—உசிதமான வாசனைச்சாமான்கள் சேர்த்துச் செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும் நெருக்கமாகவும் கறுப்பாகவும் வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும். மூளையைப்பலப்படுத்தும் மிகவும் வாசனையுள்ள தைலம் சீசாஒன்றுக்கு ரூபா 1வி பி செலவு ஒன்றுஅல்லது இரண்டு வரையிலனுப்ப 5 அணு பிரத்தியேகம்.

24 இரக்ஷாமிர்தம்—தாபரவர்க்கத்தைச்சார்ந்த அனேக அபூர்வமூலிகைகளாற் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவேதயார்செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள தூர்க்குணங்கள் இதற்கில்லை, காப்பிப்பொடியைப்படிஉபயோகிக்கிறேமோ அவ்விதமாக இதையும் உபயோகிக்க மிகவும்ருசியான பானமாகும். அனேக்குழந்தைமுதல்விருத்தாப்பியர் வரையில்எல்லாரும் உபயோகிக்கலாம். சுரம் சன்னி சர்ப்பபிரவசம் காலரு முதலியகாலங்களில் இச்சூரணத்தின் கஷாயத்தைப் பாலுடன் அல்லது பால்சேர்க்காமல் சமயத்துக்குத்தக்கபடி உபயோகிக்க அனேகர் நோய்களிலிருந்து குணப்படுவதுமன்றி நோய்வராமலுங் காக்கும். பித்தவாயுசம்கூடியம் அஜீரணம் மலச்சிக்கல் தலைவலிமுதலியவைகளைப்போக்கும், இரத்தத்தைச்சுத்திசெய்து தாதுவிர்த்தியையும் தேகஆரோக்கியத்தையுந்தரும் அக்கினிமாந்தமுள்ளவர்களுக்கும் மதுமூத்திரம் அதிமூத்திரரோகிகளுக்கும் அருமையான வஸ்து இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மதுமூத்திரரோகிகளின் நீருள்ள தித்திப்பையும் நீரின் அளவையுங்குறைத்துமூத்திரரோகத்தை அடியோடுகுணமாக்கும் தேகத்தின் உஷ்ணத்தைச் சாந்திசெய்யும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை யதிகப்படுத்தும். மாணுக்கர்கள் வக்கீல்கள் உத்தியோகஸ்தர்கள் பகைக்குத்தக்ககுணமுள்ள காபிதேயிலையை விட்டுவிட்டு இதைஉபயோகிக்க அருமையான சூர்ணம் டப்பா ஒன்றுக்கு விலை அணு 6. வி பி செலவு 5 அணு பிரத்தியேகமாகும்.

25 சர்பத்துகள்—திராக்ஷப்பழம் நன்னாரிவேர் ரோஜாப்புஷ்பம் வாழைப்பழம் எலுமிச்சம்பழம் மாதாளைப்பழம் இச்சிலிப்பழம் பாதம் அன்னுசிப்பழம் தருஞ்சிப்பழம் கோமட்டிப்பழம் சிமை.இலந்தைப்பழம் தாமரைப்புஷ்பம் இஞ்சிசத்துகள், ஷெர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள்கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒருசேர் குளிர்ந்தசலத்திலாவது சோடாவாட்டரிலாவது சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும்,எந்தப்பழச்சர்பத்து உபயோகிப்பட்டதோ அந்தப்பழத்தின் மதுரமானவாசனையோடுகூடிய சர்பத்தாகும். அரை அவுன்சுச்சீசாக்களில்விற்கப்படும்.இச்சிறுசீசாவிலுள்ள சர்பத்து50 சேர் குளிர்ந்தசலத்துடனுவது சோடாவாட்டரோடாவது சேர்ந்தால் 50 சேர் திடமானசர்பத்தாகும். அரைஅவுன்சுள்ள சீசாஒன்றுவிலை அணு 8. வி பி செலவு ஒன்றுமுதல் அழு 3சீசகள்வரையிலனுப்பஅணு5பிரத்தியேகம்

26 சுகந்தமூக்குத்தூள்—இந்த மூக்குத்தூள் மிகவும் சேர்த்தியானமுறையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. வெகுஇன்பமான வாசனையுடையது. ஒருதரமிதை ஒருமனிதன் எவ்வளவுமூக்குத்தூள் உபயோகிப்பானே அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் சம்முடையகசுக்கு மூக்குத்தூளில் ஒருசிட்டிகையெடுத்து நன்றாய்க் கலந்துகொண்டால் அந்தத்தூள்முழுவதும் அதிகமனோரமியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும்.கடைகளில்விற்கும் சாதாரணமூக்குத்தூளுடன் ஒருசிட்டிகைசேர்த்தாலே போதுமானது. தனியாக உபயோகப்படுத்தல் அநுவசியம். இத்தூள்சேர்த்த மூக்குத்தூள்கெடாமல் நெடுநாள் சுகந்தபரிமளத்துடன் காரம்போகாமலிருக்கும். தலைவலி பீனிசம் ஜலதோஷம் நாசியிலிருந்துநீர்வடிதல் பண்டைக்குத்துநீர்ப்பீனிசம் நாசியில்துர்நாற்றம் மயக்கம் முதலியதுதீரும். இதில் லவச்சாரஞ்சேரவில்லை. வழக்கமான மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தைநீக்கிச் சதாசுகமமென்ற பரிமளத்தை, வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி தும்மல்போகிற வழக்கத்தைநாளுக்குநாள்குறைத்து கடைசியில் சிலர் தாள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிசெய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்தமூக்குத்தூள் சுமார் ஒருமாசத்திற்குப்போதுமானது. சீசா ஒன்றுக்கு விலை அணு4 வி பி செலவு 1 முதல் 3 சீசாக்கள்வரையில் அணு 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள்வரையில் வி பி செலவு அணு 5 பிரத்தியேகம் 7முதல் 12 சீசாக்கள்வரை வி பி செலவு அணு7

27அசோககிருதகம்—ஸ்திரீகளுக்குமாதந்தோறும்பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல்அக்காலங்களில் பகிஷ்டையாகுதல் பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல் பகிஷ்டையாகுஞ் சமயத்தில் வயிற்றுவலி காலெரிவு தேகக்களைத்தல் வாந்தியாகுதல், பகிஷ்டையாகுஞ்சமயத்தில் ரஜஸ் அதிகமாகப் போகுதல் முதலிய ரஜோதோஷங்களும் யோனிசுருக்கம் யோனிப்புற்று கருப்பையிலிருந்துசொழுகுதல் எப்பொழுதும் கருப்பையிலிருந்து வெள்ளைமையான நீர்ஒழுகுதல் யோனிரணங்கள் இவைமுதலிய ஸ்திரீசம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது கீர்த்தி ஔஷதம். குதம்சூலைரோகங்களுக்கும் மற்றும் [illegible] யோனிசம்பந்த ரோகங்களுக்கும்அற்புதமாய் நன்மைசெய்யும். விலை சீசாஒன்றுக்கு ரூபா 1. ஒன்றுஅல்லது இரண்டு சீசாக்கள் வரையில் வி பி செலவு அணு 5 பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

MY ADDRESS
P. SUBBRAOY
Ayurvedic Pharmacy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

Printed and published by
S. Tmbimuttupillai at his Achuvaly
Gnanapragasa Yanthira office,
Achuvaly, Jaffna